
# EEDISSIA

**Erode District Small Industries Association**


5/1, SIDCO Industrial Estate, Chennimalai Road, Erode - 638 001. Tamilnadu.

Ph. : 0424 - 2274307 Cell: 97878 20202 E-mail : eedissia@gmail.com


**OFFICE BEARERS**



**Mr. P. Thirumoorthy**
President



**Mr. V. Saravanan**
Immd. Past President



**Mr. V.T. Shreedhar**
Vice President



**Mr. P. Kandasamy**
Vice President



**Mr. R. Ram Prakash**
Secretary



**Mr. S. Palanivel**
Treasurer



**Mr. A. Saravanababu**
Jt. Secretary

## INSIDE...


| | | |
|---|---|---|
| 01. | ஆசிரியர் செய்திகள் | 06 |
| 02. | அறிஞர்களின் பொன்மொழிகள்... | 06 |
| 03. | தலைவர் செய்திகள் | 09 |
| 04. | செயலாளர் செய்திகள் | 10 |
| 05. | தேங்காய் நாரில் புரட்சி | 13 |
| 06. | ஈடிசியா 7-வது செயற்குழு கூட்டம் | 15 |
| 07. | வரி செலுத்துவோர் வசதி மையம் | 16 |
| 08. | கனவு காணுங்கள்! | 20 |
| 09. | Circular No.64/38/2018-GST | 23 |
| 10. | சிறப்பு பொதுக்குழு கூட்டம் | 25 |
| 11. | New Members | 26 |
| 12. | Circular No.64/38/2018-GST–ன் தமிழாக்கம் | 27 |
| 13. | பிளாஸ்டிக் பாட்டில்கள் முகக்கவசம் | 28 |
| 14. | தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் | 42 |
| 15. | சேவைக்கே அர்ப்பணிப்பு | 44 |
| 16. | நேர்மறைக் கருத்து கூறல் | 46 |
| 17. | Office of the Commissioner of Labour | 50 |
| 18. | Old Job New Job | 53 |
| 19. | ஆன்லைன் வணிகம் – Rural Basket | 55 |
| 20. | வாழுங்கள் நிகழ்காலத்தில் | 59 |
| 21. | மனிதவள மேலாண்மை | 63 |



The Editor intended not to us any copyrighted material for the publication or, if not possible, to indicate the copyright of the respective object. The material are provided by EEDISSIA Bulletin as a service to its readers on an 'as is' basis and may be used for information purposes only. EEDISSIA assumes no responsibility for error or omission in these materials. EEDISSIA makes no, and expressly disclaims any, representation or warranties, express or implied, regarding the EEDISSIA Bulletin, including without limitation the accuracy, completeness, or reliability of text, graphics, and other items published. No advice or information give by EEDISSIA Bulletin or any other party on this bulletin create any warranty or liability. Under no circumstances shall EEDISSIA or any of its Office Bearers, Executive Committee Members, Employees be held liable for any other damages, whether direct incidental, indirect special consequential damages, and including, without limitation, lost revenues or lost profits arising from or in connection with the use, reliance, or performance of the information in this bulletin.



# ஆசிரியர் செய்திகள்

ஈடிசியாவின் சங்க உறுப்பினர்கள் மற்றும் வாசகர்கள் அனைவருக்கும் வணக்கம்.

புதிய வருடம் தங்களுக்கும் தங்கள் குடும்பத்தினருக்கும் சிறப்பானதாக அமைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

தேங்காய் நாரிலிருந்து எவ்வாறு பொருட்களை தயாரிப்பது மற்றும் இத்தொழிலில் காணப்படும் வாய்ப்புகள் பற்றி 'தேங்காய் நாரில் புரட்சி' என்ற கட்டுரை படித்து தெரிந்து கொள்ளவும். நமது கனவுகள் மூலம் வாழ்வை வடிவமைப்பது பற்றி 'கனவு காணுங்கள்' என்ற தலைப்பில் காணலாம்.

மருத்துவ சேவையில் அர்ப்பணிப்புடன் வாழ்ந்த டாக்டர் வி. சாந்தா அவர்களின் சேவை பற்றி 'சேவைக்கே அர்ப்பணிப்பு' என்ற தலைப்பிலுள்ள கட்டுரையில் காணலாம்.

GST வரிக்கான Circular No.64–ன் தமிழாக்கம் தரப்பட்டுள்ளது. கொரோனா பல்வேறு உருமாற்றங் களுடன் தினமும் பரவி வரும் சூழலில் பிளாஸ்டிக் பாட்டில்களில் இருந்து முகக்கவசம் செய்து தொழிலில் வெற்றி கண்டு வருவது பற்றி 'பிளாஸ்டிக் பாட்டில்கள் – முகக்கவசம்' என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையின் செய்திக் குறிப்பு குறித்த தகவல்கள் தரப்பட்டுள்ளது. படித்து பயன் பெற கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயத்தில் இழப்பு ஏற்பட்டால் விவசாயிகள் சார்ந்த கால்நடை பராமரிப்பு, மீன் வளர்ப்பு, கோழி வளர்ப்பு போன்ற வேறு தொழில்களில் ஈடுபட தேவையான வழிகாட்டுதல்கள் பற்றி விவசாயிகளுக்கு உதவும் இளைஞர்கள் கட்டுரையில் கொடுக்கப்பட்டுள்ளது.

கொரோனா பெருந்தொற்றால் தொலைந்து போன தொழில்களால் வேலை வாய்ப்பை இழந்தவர்கள் எவ்வாறெல்லாம் புதிய துறைகளில் வேலை வாய்ப்பை பெறுவது என்பது பற்றி Old Job New Job என்கிற தலைப்பு சொல்கிறது.

ஆன்லைன் வணிகம் பற்றியும், நிகழ்காலத்தில் வாழுதல் பற்றியும் மனித வள மேம்பாடு பற்றியும் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. படித்து பயன் பெறவும்.

வாசகர்கள் தங்களின் நல்ல கட்டுரை அல்லது செய்திகள் ஈடிசியாவின் மாதாந்திர புத்தகத்தில் இடம் பெற வேண்டும் என நினைத்தால் தங்களது படைப்புகளை ஈடிசியாவின் மின்னஞ்சலுக்கு அனுப்பக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புடன்,

**A. சரவணபாபு,**
**பொறுப்பாசிரியர்**

## அறிஞர்களின் பொன்மொழிகள்...

- *வாய்ப்புக்காக காத்திருக்காதே. வாய்ப்பை நீயே ஏற்படுத்திக் கொள்...*

  **- அப்துல் கலாம்**

- *நம்பிக்கையோடு உன் முதலடியை எடுத்து வை. முழுப் படிக்கட்டையும் நீ பார்க்க வேண்டிய அவசியமில்லை. முதல் படியில் ஏறு.*

  **- மார்ட்டின் லூதர் கிங்**

- *தம்மால் வெல்ல முடியும் என்று நம்புகிறவர்கள்தான் வெற்றிகளைக் குவிப்பார்கள்.*

  **- வெர்ஜில்**

- *என்ன நடந்தாலும் எதை இழந்தாலும் நான் சோர்ந்து போக மாட்டேன்! காரணம் நான் 100 வெற்றிகளைப் பார்த்தவன் அல்ல! 1000 தோல்விகளைப் பார்த்தவன்.*

  **- தாமஸ் ஆல்வா எடிசன்**



# தலைவர் செய்திகள்

# ஜனவரி 2022

அன்பு உறுப்பினர்களுக்கு, வணக்கம்.

கொரோனா மூன்றாவது அலை மற்றும் ஓமைக்ரான் தொற்று வேகமாக பரவி வருகிறது. மாவட்ட நிர்வாகம் தொழில் துறையினர் அனைத்து கொரோனா பாதுகாப்பு நெறிமுறைகளையும் தவறாமல் பின்பற்ற வேண்டும் என அறிவுறுத்தியுள்ளது.

கண்டிப்பாக அனைத்து பணியாளர்களும் இரண்டு தவணை தடுப்பூசி செலுத்தி இருக்க வேண்டும். அதற்கான சான்றிதழை கண்டிப்பாக வைத்திருக்க வேண்டும். அடிக்கடி கைகளை கிருமி நாசினியால் சுத்தம் செய்வது, பணி செய்பவர்களுக்கு இடையே போதுமான இடைவெளி இருக்கும்படி பணி செய்வது, கட்டாயம் முகக் கவசம் அணிவது, பணியாளர்களுக்கு உடல் வெப்பப் பரிசோதனை செய்வது போன்ற அனைத்து நெறி முறைகளையும் பின்பற்றி நிறுவனங்கள் இயங்கலாம் எனவும் எந்த நேரமும் நிறுவனங்கள் ஆய்வு செய்யப்படும் எனவும் ஆய்வின்போது இந்த நெறிமுறைகளை பின்பற்றாத நிறுவனங்களுக்கு அபராதம் விதிக்கப்படும் எனவும் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

எனவே அனைவரும் கொரோனா நெறிமுறைகளை கண்டிப்பாக பின்பற்றி நிறுவனங்களை நடத்தும்படி கேட்டுக் கொள்கிறேன்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைக்காக தமிழக முதல்வர் புதிய அறிவிப்புகள் வெளியிட்டுள்ளார். அவைகளில் சில...

- ❖ தமிழ்நாடு சிட்கோ மூலம், தமிழ் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் சீரான தொழில் வளர்ச்சி ஏற்படுத்த புதிய தொழிற்பேட்டைகள் அமைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ❖ புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் (NEEDS) கீழ் பயன் பெற தேவையான கல்வித் தகுதியை பன்னிரெண்டாம் வகுப்பு என தளர்த்தியும் தனி நபர் முதலீட்டு மானியத்தை உயர்த்தி வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ❖ குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி தொழில் நிறுவனங்கள் கொள்முதல் செய்யும் உயர்விலை கொண்ட அளவீடு மற்றும் சோதனை கருவிகளில் செய்யப்படும் முதலீடு, மானியம் கணக்கிட தகுதி யானதாக சேர்க்கப்பட்டு முதலீட்டு மானியம் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ❖ தொழில் முனைவோருக்கு காலக் கடன் (Team Loan) மற்றும் நடைமுறை மூலதனக் கடன் (Working Capital Loan) தாய்கோ வங்கியிலிருந்து எளிதில் கிடைத்திடும் வகையில், தாய்கோ வங்கி மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற் கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பல அறிவிப்புகளும் வெளியிடப்பட்டுள்ளது. குறு சிறு மற்றும் நடுத்தர தொழில்களின் வளர்ச்சிக்காக தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிவிப்புகளை நமது உறுப்பினர்கள் பயன்படுத்தி தொழிலை மேம்படுத்திக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

நமது உறுப்பினர்கள் அனைவரும் கொரோனா பாதுகாப்பு நெறிமுறைகளை தவறாது பின்பற்றி நம்மையும் நம்மைச் சார்ந்தவர்களையும் காப்பதில் உறுதி கொள்வோம்....

பிரியமுடன்,

**P. திருமூர்த்தி**
தலைவர்

# செயலாளர் செய்திகள்

# டிசம்பர் 2021 & ஜனவரி 2022



**18.12.2021 :** காலை 10.00 மணிக்கு EDII – TN மற்றும் ஈடிசியா சார்பில் தொழில் முனைவோர் விழிப்புணர்வு முகாம் காணொலி காட்சி மூலம் நடைபெற்றது. இதில் EDII ஒருங்கிணைப்பாளர் திரு.R.முருகானந்தம் அவர்கள் கலந்து கொண்டார்.

**21.12.2021 :** மாலை 06.30 மணிக்கு ஈடிசியா கூட்ட அரங்கில் 7-வது செயற்குழு கூட்டம் தலைவர் திரு.P.திருமூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் டான்ஸ்டியாவின் தலைவர் திரு.K.மாரியப்பன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்.

**24.12.2021 :** காலை 10.00 மணிக்கு EDII – TN மற்றும் ஈடிசியா சார்பில் தொழில்முனைவோர் விழிப்புணர்வு முகாம் காணொலி காட்சி மூலம் நடைபெற்றது. இதில் EDII ஒருங்கிணைப்பாளர் திரு.R.முருகானந்தம் அவர்கள் கலந்து கொண்டார்.

**27.12.2021 :** மாலை 04.00 மணிக்கு ஈடிசியா கூட்ட அரங்கில் ECPL கட்டிடக் குழு கூட்டம் நடைபெற்றது. கட்டிட குழுத் தலைவர் திரு.M.சின்னசாமி, சங்கத் தலைவர் திரு.P.திருமூர்த்தி, துணைத் தலைவர் திரு.P.கந்தசாமி, பொருளாளர் திரு.S.பழனிவேல், உடனடி முன்னாள் தலைவர் திரு.V.சரவணன், முன்னாள் தலைவர்கள் திரு.R.சுப்ரமணியன், திரு.K.வெங்கடேஸ், மற்றும் திரு.P. நடராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**27.12.2021 :** மாலை 06.00 மணிக்கு ஈடிசியா கூட்ட அரங்கில் நிர்வாகக் குழு கூட்டம் தலைவர் திரு.P.திருமூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**05.01.2022 :** மானியத்திற்கான திட்டத் தேர்வுக்கான பிரயாஸ் கண்காணிப்புக் குழு கூட்டம் TBI கொங்கு பொறியியல் கல்லூரியில் நடைபெற்றது. தலைவர் திரு. P. திருமூர்த்தி அவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

**07.01.2022 :** மாலை 07.30 மணிக்கு காணொலி காட்சி மூலம் நிர்வாகக் குழு கூட்டம் தலைவர் திரு.P.திருமூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**10.01.2022 :** மாலை 06.30 மணிக்கு சிறப்பு பொதுக் குழு கூட்டம் தலைவர் திரு.P.திருமூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. துணைத்தலைவர் திரு.V.T.ஸ்ரீதர், செயலாளர் திரு.R.ராம்பிரகாஷ், பொருளாளர் திரு.S.பழனிவேல், உடனடி முன்னாள் தலைவர் திரு.V.சரவணன், முன்னாள் தலைவர்கள் திரு.R.சுப்ரமணியன், திரு.K.வெங்கடேஸ், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**R. ராம்பிரகாஷ்**
செயலாளர்



# தேங்காய் நாரில் புரட்சி

இந்திய தென்னை மரத்தின் விளைபொருளான தேங்காயின் நார்க்கழிவிற்கு வெளிநாடுகளில் பலத்த வரவேற்பு! இந்தியாவிலிருந்து டன் கணக்கில் வெளிநாடுகளுக்கு தேங்காய் நார்க்கழிவுகள் ஏற்றுமதியாகிறது. விவசாய உலகில் 'மண் இல்லாமல் வேளாண்மை' குறித்து இந்தியாவில் இப்போது பரபரப்பாகப் பேசப்பட்டாலும், வெளிநாடுகளில் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரே 'மண் இல்லாமல் வேளாண்மை'யைத் தொடங்கி விட்டார்கள். நாம் ஐம்பது ஆண்டுகள் பின்தங்கி உள்ளோம்' என்கிறார் ஈரோட்டைச் சேர்ந்த செந்தில். சுமார் 20 ஆண்டுகளாக தேங்காய் நார் கழிவுகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வரும் செந்தில் அடிப்படையில் எந்திரவியல் பொறியியல் பட்டதாரி.

**செந்தில் தொடர்கிறார்:**

"தேங்காயின் தங்கம் என்று சொல்வது தேங்காயை உரிக்கும் போது கிடைக்கும் நார்களில், (சவுரி) ஒட்டிக் கொண்டிருக்கும் மென்மையான துகள்கள்தான் கழிவு. பொதுவாக தேங்காயை உரித்தால் கிடைக்கும் அனைத்துமே கழிவாகத்தான் கருதப்படுகிறது. கயிறு தயாரிக்கும் இடங்களில் தேங்காயை மூடியிருக்கும் நார் களைப் பிரித்து எடுத்து கயிறாகத் திரிப்பார்கள். இந்த நார்களை Coconut Fibre Yarn என்பார்கள். அப்படி நார்களைத் தனியாக எடுக்கும்போது உதிரும் மென்மையான துகள்களைக் கழிவாக ஓரிடத்தில் கொட்டுவார்கள். இந்தத் துகள் களை 'Coir Pith' என்று ஆங்கிலத்தில் அழைக்கிறார்கள்.

துகள்கள் குவியலாகி, பெரிய மேடாகும் போது தீயிட்டு கொளுத்துவார்கள். அதுதான் சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தில் நடந்து வந்தது. சுருக்க மாகச் சொன்னால், 2000 வரை இந்த 'காயர் பித்' என்கின்ற, தேங்காய் நார்க்கழிவின் பயன்பாடு குறித்து தமிழகத்தில் ஏன் இந்தியாவில் யாருக்குமே தெரியாது.



சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த நிறுவனம் ஒன்று இந்தத் தேங்காய் நார்க் கழிவுகளை இங்கிருந்து எடுத்துச் சென்று ஆய்வுகள் மேற்கொண்டது. இந்தக் கழிவுகளை, மண்ணுக்குப் பதிலாகப் பயன்படுத்தி, பயிர்களை விளைவிக்கலாம். அதுவும் குறைந்த அளவு தண்ணீரில் பன்மடங்கு விளைச்சல் பெறலாம் என்பதை அனுபவபூர்வமாக அறிந்து கொண்டார்கள். இந்தக் கழிவுகளில் உள்ள சோடியம், பொட்டாசியம் போன்றவற்றுடன் நீர் அல்லது சாணக் கரைசலை அளவுடன் தெளித்து மக்கச் செய்து அவற்றின் வீரியத்தைக் குறைத்து கரிசல் மண் போன்ற இந்த உரம் உதிரியாகவும் கிடைக்கும். 'குரோ பேக்'களில் வைத்து விற்கப்படும் மண் இந்த 'காயர்பித்' தான். 'காயர்பித்'தை மக்கச் செய்யாமல் பெரிய சிறிய செவ்வக, சதுர கட்டிகளாக மாற்றி அவற்றில் பயிர்களை விளைய வைக்கின்றார்கள்.

தமிழகத்தில் தேங்காய் நார்க்கழிவுகளை சாலை ஓரங்களில் போட்டு எரிப்பது, சுற்றுப்புறச் சூழலுக்குக் கேடு என்பதால், கெடுபிடிகள் அதிகமாக அபராதம் போடும் அளவுக்குப் போக, கழிவுகளை என்ன செய்வது? எங்கே கொண்டு போய்க் கொட்டுவது? என்று திகைத்துக் கொண்டு இருந்த தேங்காய் விவசாயிகளிடம், கழிவுகளை என் நிலத்தில் கொண்டு வந்து கொட்டுங்கள் என்று சொல்ல... அப்பாடா.... தலைவலி தீர்ந்தது என்று பெருமகிழ்ச்சியுடன் கழிவுகளைக் கொண்டு வந்து எனது நிலத்தில் கொட்டினார்கள். அப்படிக் கொட்டுவதற்கு, ஒரு டிராக்டருக்கு 200 ரூபாய் கட்டணமாகவும் எனக்கு கொடுத்து விட்டுப் போனார்கள். ஆனால், இப்போது நிலைமை தலைகீழாகி விட்டது. இப்போது, நார்களை பிரித்து எடுக்கின்ற ஒரு சிறு தொழிற்கூடத்தில் இருந்து, தேங்காய் நார்க் கழிவுகளைப் பெற ஐந்து லட்சம் ரூபாய் முன்பணம் கொடுக்க வேண்டும். அது தவிர, ஒரு டிராக்டர் கழிவுக்கு 12 ஆயிரம் ரூபாய்

கட்டணம் நான் செலுத்த வேண்டும். அதுவும், அவர்கள் சொல்லுகின்ற நேரத்தில் அங்கே சென்று, அள்ளிக் கொண்டு வர வேண்டும். தவறினால், வேறு போட்டியாளர்கள் அள்ளிக் கொண்டு போய் விடுவார்கள். அந்த அளவுக்கு தேவை, போட்டிகள் பெருகி, தேங்காய் நார்க் கழிவு தங்கத்திற்கு நிகரான விலைமிக்கப் பொருளாக மாறிவிட்டிருக்கிறது.

எதிர்காலத்தில், பூச்சிக்கொல்லி மருந்துகள் தெளிக் காமல் பயிர் விளைவிக்க வேண்டும் என்ற சூழ்நிலை ஏற்பட்டால் அது தேங்காய் நார்க் கழிவுகளில் மட்டும் தான் சாத்தியம் ஆகும். இன்று, இந்தியா, வியட்நாம், பிலிப்பைன்ஸ் மற்றும் சில தெற்கு ஆசிய நாடுகளைத் தவிர, சீனா உட்பட அனைத்து நாடுகளிலும், தேங்காய் நார்க் கழிவுகளில்தான் விவசாயம் பெருமளவில் நடைபெறுகின்றது. ஐரோப்பா நாடுகள், ஜப்பானில் விளைநிலங்களின் மீது பசுமைக் குடில்கள் அமைத்து விதையை ஊன்றி, அது முளைப்பதற்குத் தேவையான பருவநிலையை ஏற்படுத்தி, எந்த விதையாக இருந்தாலும், அதை முளைக்க வைத்து விடுவார்கள். அப்படி முளைக்க வைப்பதற்குப் பயன்படுத்துகின்ற ‘மண்’தான் இந்தத் தேங்காய் நார்க் கழிவுகள்.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில், இப்போது பெரும்பாலும், ‘காயர் பித்’ விவசாயம்தான் நடைபெறுகிறது.

தேங்காய் நார்க் கழிவின் சிறப்பு என்னவென்றால், ஒரு கிலோ ‘காயர் பித்’, 15 லிட்டர் தண்ணீரை உறிஞ்சி உள்வாங்கி சேமித்து வைத்துக் கொள்ளும். அந்தத் தண்ணீரை, அதில் இருந்து நீங்கள் பிரித்து எடுக்கவே முடியாது. எனவே, அதில் செடிகள் விளைவதற்கு, நீங்கள் கூடுதலாகத் தண்ணீர் பாய்ச்ச வேண்டிய தேவை மிக மிகக் குறைவு. தேங்காய் நார்க் கழிவுகளை மண்ணில் கலந்தால், மண் எப்போதும் ஈரப்பதத்துடன் இருக்கும். சாதாரண விளைநிலத்தில், பத்து ஆயிரம் சதுர அடியில், பத்து ஆயிரம் லிட்டர் தண்ணீரைப் பயன்படுத்தி, 100 கிலோ தக்காளியை விளைய வைக்கிறோம் என்றால், இந்தக் காயர் பித்தைப் பயன்படுத்தி 1000 சதுர அடியில், வெறும் 100 லிட்டர் தண்ணீர் ஊற்றி, 1000 கிலோ தக்காளி விளைய வைக்கும் மாயாஜாலத்தை நடத்தலாம்.

தலைநகர் சென்னையில் மட்டும் ‘காயர் பித்’ ஏற்றுமதி செய்கின்ற 120 நிறுவனங்கள் இயங்குகின்றன. தமிழ் நாட்டில் மட்டும் அல்ல; தென்னிந்தியா முழுவதும் இந்தத் தொழில் வேகமாகப் பரவி விட்டது. கடந்த ஆண்டில் மட்டும், ‘காயர் பித்’ ஏற்றுமதி மூலம் தமிழ்நாட்டுக்குக் கிடைத்த பணம் 1200 கோடி. இந்த ஆண்டு, அதை விட உயரும்.

‘காயர் பித்’ உலகின் பெரும்பாலான நாடுகளுக்கு இங்கிருந்து ஏற்றுமதியாகிறது. நான் மட்டுமே, 16 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றேன். தாத்தா, அப்பா விவசாயி, அந்த வழியில் நானும். இப்போது இந்தத் தொழிலுக்கு அரசு 75 விழுக்காடு மானியம் தருகிறது. இந்தத் தொழிலில் ஈடுபட்டு இருப்பவர்கள் சேர்ந்து ஒரு சங்கம் அமைத்து இருக்கின்றோம். அதற்கு நான்தான் பொருளாளர். நம்மிடம் இருந்து வாங்கிய காயர் பித்தில் அவர்கள் என்னென்ன மாறுதல்கள் செய்கின்றார்கள் என்பதையும் நேரில் பார்த்தேன். நமது நாட்டு இயற்கை வேளாண்மை குறித்து, அவர்கள் என்னிடம் ஆர்வமாகக் கேட்பார்கள். நானும் சொல்லுவேன். டன் கணக்கில் தேங்காய் நார்க் கழிவு களை நாம் ஏற்றுமதி செய்தாலும், இந்தக் கழிவைப் பயன்படுத்தி பெரிய அளவில் விவசாயம் செய்ய நாம் முனைப்பு காட்டவில்லை என்பது வருத்தமான விஷயம்.

எனது நிலத்தில், யூரியா பயன்படுத்துவது இல்லை. யூரியா போட்டு விளைவித்த மஞ்சள், குவிண்டாலுக்கு 6500 ரூபாய் கிடைக்கின்றது. எனது நிலத்தைப் பற்றி வணிகர்களுக்குத் தெரியும். எனவே, எங்களுக்கு, குவிண்டாலுக்கு ரூ.13 ஆயிரம் தருகின்றனார்கள். செயற்கை உரங்களால் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு மட்டும்தான் கூடுதல் விளைச்சல் பெற முடியும். அதன்பிறகு, அந்த மண் முழுமையாகக் கெட்டு விடுகின்றது. அதன்பிறகு, நீங்கள் என்னதான் மருந்து உரம் போட்டாலும் அதே விளைச்சல்தான் கிடைக்கும். கூடுதலாக எதிர்பார்க்க முடியாது.

பாலைவன துபாயில், அபுதாபி செல்கின்ற வழியில், ‘எமிரேட்ஸ் ஆர்கானிக் புராடக்ட்ஸ்’ என்ற நிறுவனத் திற்குச் சென்றேன். அந்த ஒரு நிறுவனத்தில் மட்டும், காயர் பித் பயன்படுத்தி, ஒரு நாளைக்கு, 1200 கிலோ தக்காளி விளைவித்து, அமீரகக் கூட்டு அமைப்பில் உள்ள ஆறு நாடுகளுக்கும் அனுப்பிக் கொண்டு இருக்கின்றார்கள்.

தேங்காய் நார் கழிவுகளில் இருக்கும் கரிமச் சத்து, தழைச்சத்து விகிதத்தைக் குறைப்பதற்கும், லிக்னின் மற்றும் செல்லுலோஸ் அளவை குறைப்பதற்கும், தேங்காய் நார்க் கழிவானது மக்க வைக்கப்படுகிறது. இவ்வாறு மக்கச் செய்வதால் உரச்சத்து அதிகரித்து, அதிலுள்ள சத்துக்களை தாவரங்கள் எளிதாக உறிஞ்சிக் கொள்ளும் வகையில் மண்ணை தேங்காய் நார் கழிவு பக்குவப்படுத்துகிறது. ரசாயன உரங்களை மண்ணில் கலக்க தயங்காத நம்மவர்கள் இயற்கை உரமான காயர் பித்தை நிலத்தில் சேர்க்கத் தயங்குகிறார்கள்” என்கிறார் செந்தில்.

நன்றி: **தினமணி**



# ஈடிசியா 7-வது செயற்குழு கூட்டம்

ஈரோடு மாவட்ட சிறுதொழில்கள் சங்கத்தின் 7-வது செயற்குழு கூட்டம் 20.12.2021 அன்று திங்கட்கிழமை மாலை 06.30 மணிக்கு ஈடிசியா சக்தி மசாலா அரங்கில் சங்கத் தலைவர் திரு.P.திருமூர்த்தி அவர்கள் தலைமையில் நடை பெற்றது. அது சமயம் கீழ்கண்ட பொருட்கள் தொடர்பாக விவாதித்து முடிவு செய்யப்பட்டது.

சங்கத்தலைவர் திரு.P.திருமூர்த்தி அவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்த சங்க உறுப்பினர்கள், முன்னாள் சங்கத் தலைவர்கள், நிர்வாகக் குழு மற்றும் செயற்குழு உறுப்பினர்களை வரவேற்றார்.

சங்கத்தின் கடந்த மாத நிகழ்வுகளை சங்கத்தின் செயலாளர் திரு.R.ராம்பிரகாஷ் அவர்கள் வாசித்து சபையின் ஒப்புதல் பெறப்பட்டது.

சங்கத்தின் வரவு செலவு கணக்குகளை சங்கப் பொருளாளர் திரு.S.பழனிவேல் அவர்கள் வாசித்து சபையின் ஏகமனதான ஒப்புதலை பெறப்பட்டது.

சங்கத்தலைவர் திரு.P.திருமூர்த்தி அவர்கள் தனது உரையில் கொரோனா பாதிப்பிலிருந்து இன்னும் மீள முடியாத சூழலில் மூலப் பொருட்கள் மற்றும் இடு பொருட்களான இரசாயனங்களின் கடுமையான விலையேற்றம் மற்றும் ஜவுளித் துறையில் GST வரி உயர்வு இந்த தொழில்களையும் தொழில் சார்ந்த அனைவரையும் மிகுந்த இன்னலுக்கு உள்ளாக்குகிறது என்றும் குறிப்பாக ஜவுளித் தொழில், பிரிண்டிங், உணவுப் பொருள், பிளாஸ்டிக் இன்ஜினியரிங் தொழில்களின் மூலப் பொருட்கள் 70% முதல் 87% வரை கடுமையான உயர்வை சந்தித்துள்ளதாக கூறினார்.

இவைகளை சரி செய்யவும், GST வரி உயர்வு, மூலப்பொருட்கள் விலையேற்றத்தையும் அரசு தலையிட்டு தீர்வு காண வேண்டும் எனவும் கூறினார்.





கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக டான்ஸ்டியா தலைவர் திரு.K.மாரியப்பன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். அவரது உரையில் டான்ஸ்டியாவின் செயல்பாடுகள், புதிய அரசு திட்டங்கள் பற்றி விரிவாக எடுத்துக் கூறினார். உறுப்பினர்களின் சந்தேகங்களுக்கும் விளக்கமளித்தார்.

கூட்டத்தில் தீர்மானங்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு.R.சுப்ரமணியம் அவர்கள் வாசித்து சபையின் கரவொலி மூலம் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கூட்டத்தின் முடிவில் செயலாளர் திரு. R.ராம்பிரகாஷ் அவர்கள் வந்திருந்தவர்களுக்கு நன்றி தெரிவிக்க கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

# மதுரை தயாரிப்பாளர்கள் மற்றும் வணிகர் சங்கங்களின் கூட்டமைப்பு






# வரி செலுத்துவோர் வசதி மையம்

அன்பு நண்பர்களே, வணக்கம்.

கடந்த 30. 12. 2021 அன்று மதியம் சுமார் 12 மணி அளவில் ஏற்கனவே வலியுறுத்தி வந்த வரி செலுத்துவோர் வசதி மையம் ஒன்று மதுரை புதிய ஜிஎஸ்டி கோட்டத்தில் (பீபீ குளம் மதுரை என்ற விலாசத்தில் தரைதளத்தில்) ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எல்லா அலுவலக நாட்களிலும் காலை 10 முதல் மாலை 5 வரை இரண்டு அதிகாரிகள் அங்கு இருப்பார்கள். வணிகர்கள், அவர்களுடைய பிரதிநிதிகள், கணக்காளர்கள், வணிகர் சங்க பிரதிநிதிகள் ஆகியோர் கொண்டு வரும் சந்தேகங்கள் பிரச்சனைகளுக்கு தீர்வு சொல்ல தயாராக இருப்பார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

ஏற்கனவே சென்ற பத்து நாட்களுக்கு முன்பாக மதுரை மத்திய ஜிஎஸ்டி வரி மண்டல அலுவலகத்தின் அழைப்பிதழின் பேரில் நம்முடைய சில சந்தேகங்களையும் மனுவையும் கொடுத்து வரப்பட்டது தாங்கள் அறிந்ததே. அப்பொழுது ஜிஎஸ்டிஆர் 9, 9C என்பவைகளை தள்ளிவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது. அது தற்போது நிறைவேறி உள்ளது.

சில நாட்களுக்கு முன்பு இந்த ஜிஎஸ்டி வரி செலுத்துவோர் வசதி மையம் பற்றி நமக்கு தகவல் தரப்பட்டது. மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்கள் காணொலி காட்சி மூலம் திறந்து வைப்பார் என்றும் தேதி மட்டும் கடைசியாக சொல்லப்படும் எனவும் விருந்தாளிகளாக வந்து கலந்து கொள்ளுங்கள் என்றும் சொல்லி அனுப்பி வைத்தார்கள். அதன்படி காலை சுமார் 11 மணி அளவில் நமக்கு திடீரென்று அழைப்பு வந்தது. நான்கு பிரதிநிதிகள் மட்டும் வரச்சொன்னார்கள். ஆனால் கடைசி நேர மாறுதலாக காலை மாண்புமிகு நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்கள் இந்த மையத்தை காணொளி மூலம் திறக்க இயலவில்லை. ஏனெனில் அடுத்தநாள் ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டம் நடக்க இருப்பதால் அதில் நிதியமைச்சர் கலந்து கொள்ள இருப்பதால் அது சம்பந்தமான வேலைகளில் நிதியமைச்சர் மூழ்கி விட்டார் என்றும்



வணிகர் சங்க பிரதிநிதி சிலரை அழைத்து அவர்கள் மூலமாகவே திறந்து வைக்குமாறு டெல்லியில் இருந்து தகவல் வந்தது என்று கூறினார்கள் நாங்கள் விருந்தினராக போனோம்.

ஆனால் நமது தலைவர் திரு. எக்ஸெல் பழனிச்சாமி அவர்களை இந்த உதவி மையத்தை திறந்து வைக்குமாறு கமிஷனர் வேண்டுகோள் விடுத்தார். இது யாரும் எதிர்பாராத ஒன்று. மேலும் காலை திடீரென்று ப்ரோக்ராம் மாறும்போது மதுரையில் உள்ள வணிகர் சங்க பிரதிநிதிகளை அழைக்க வேண்டும் என்று சொன்ன போது அதிகாரி களுக்கு உடனடியாக நினைவு வந்தது நமது தயாரிப்பாளர்கள் மற்றும் வணிகர் சங்கங்களின் கூட்டமைப்பு என்பதை மகிழ்வுடன் தெரிவிக்க கடமைப் பட்டுள்ளோம். அதிகாரிகளின் ஞாபகத்தில் நாம் என்றும் இருக்கிறோம் என்று அறிந்து கொள்வதில் மிக மகிழ்ச்சியாக இருக்கிறோம். நாம் அங்கு செல்வதற்கு தகவல் சொல்ல்லி அதன்படி நமது கூட்டமைப்பு இணைப்புச் சங்கங்கள் சிலர் வந்தனர். நமது தலைவரை இந்த மையத்தை திறந்து வைக்க ஆணையர் அழைப்பார் என்று நாங்கள் எதிர்பார்க்க வில்லை. எனினும் இரண்டு முறை அவர் நீங்கள்தான் திறக்க வேண்டும் வணிகர் சங்க பிரதிநிதிகள்தான் திறக்க வேண்டும் என்று மேலிடத்து தகவல் என்று சொன்னார்கள். இருப்பினும் மத்திய அரசு அலுவலகத்தில் அரசு பிரதிநிதிகள் இல்லாமல் வணிகர் சங்க பிரதிநிதி மட்டும் திறந்து வைப்பது சரியாக இருக்காது என்று நமது தலைவர் என்று கூறியதால் அதன்படி பேசி மதுரை மத்திய ஜிஎஸ்டி துறை ஆணையர் திரு. சிவக்குமார் ஐஆர்எஸ் அவர்களும் நமது தலைவர் எக்ஸெல் பழனிச்சாமி அவர்களும் ஒருசேர திறந்து வைத்தனர் என்பதை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த மையத்தை வியாபாரிகள், வணிகர் சங்கப் பிரதிநிதிகள், கணக்காளர்கள் ஆகியோர் பயன் படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்களுடைய புத்தகங்கள், வாட்ஸ்அப் குரூப்பில் இவ்வாறு மையம் செயல்பட ஆரம்பித்து விட்டது பற்றி தகவல் பரப்பி அதிக வணிகர்கள் பலன் அடையுமாறு செய்யும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு,
**எக்ஸெல் செல்வவேல் பாண்டி**
செயலாளர், மதுரை தயாரிப்பாளர்கள்
மற்றும் வணிகர் சங்கங்களின் கூட்டமைப்பு.

## சங்க உறுப்பினர்களுக்கு ஓர் முக்கியமான தகவல்

**நமது சங்கத்திற்கு உறுப்பினர்கள் செலுத்த வேண்டிய சந்தா தொகையை உறுப்பினர்களிடமிருந்து ரொக்கம்/ காசோலை மற்றும் ஆன்லைன் மூலம் பெறப்பட்டு வருகின்றன. ஆன்லைன் மற்றும் பணம் செலுத்தும் இயந்திரம் மூலம் ஈடிசியா கணக்கில் பணம் செலுத்தி இரசீது பெறாமல் உள்ள உறுப்பினர்கள் செலுத்திய விபரங்களைத் தெரிவித்து உடனடியாக ஈடிசியாவில் இரசீது பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**


## EDITORIAL BOARD

**PUBLISHER**
**S.K. RAJESHWARAN**
Past President

**EDITOR**
**S. RAMAMOORTHY**
R.G.S. Feeds

**EDITOR IN CHARGE**
**A. SARAVANABABU**
S.B.B. Stainless Steel Fabrication

**ADVISORS**
**G. SUNDARAM**
Past President

**R. MAYILSAMY**
Past President

**R. BALASUBRAMANIAM**
Past President

**EDITORIAL TEAM**
**V.T. Shreedhar**
Sabithaa Granite and Marbles

**M.K.K. Barath**
Tower Solar Energies

**S. SUDHAKAR**
Color Funds Insurance Broking

**PRINTED AT**
**SAKURA OFFSET PRINTERS**
Erode. Ph.: 0424 - 2251464

**DESIGNED BY**
**VEL GRAPHICS,** Coimbatore.
Mob : 94893 62455
e-mail :
velgraphics.chandramohan4@gmail.com



# கனவு காணுங்கள்!

கனவுகள் நம் ஆழ்மனதின் ரகசியம் கூறும் அற்புதங்கள். பொதுவாக கனவுகள் உறக்கத்தில் Rem எனப்படும் வேகமாகக் கண்கள் அசையும் நிலையில் தான் தோன்றும். அரை விழிப்பு நிலையில் தோன்றாது. ஆனால், சில சமயங்களில் அது அரை விழிப்பு நிலையிலும் தோன்றும். அதனையே லூசிட் கனவுகள் என்பார்கள். சில தருணங்களில் நாம் கனவு காண்கிறோம் என்று உணர்ந்தபடியே கனவு கண்டு கொண்டு இருப்போம் இல்லையா? அந்த நிலைதான் லூசிட் கனவு நிலை.

சாதாரணக் கனவுக்கும் லூசிட் கனவுக்கும் இருக்கும் முக்கியமான வேறுபாடு சாதாரண கனவு தோன்றும் போது நாம் என்ன செய்கிறோம் என்பதை நம்மால் கவனிக்க மட்டுமே முடியும். நம் செயல்களையோ அந்தக் கனவையோ நம்மால் கட்டுப்படுத்த இயலாது. காலை எழுந்தவுடன் இப்படி ஒரு கனவு வந்தது என்பதை நினைவுகூர மட்டுமே இயலும்.

ஆனால் –

லூசிட் கனவுகள் இப்படி அல்ல. இவற்றில் நாம் இயங்க முடியும். இக்கனவுகளை நாம் இயக்கவோ நம் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவோ இயலும். லூசிட் கனவுகளும் நம் ஆழ்மனதோடு தொடர்புடையவைதான். எனவே, சரியான பயிற்சி இருந்து லூசிட் கனவுகளை நாம் நம் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள பழகினால், ஆழ்மனதை ஓர் எல்லை வரை கட்டுப்பாட்டில் எடுக்கலாம் என்கிறார்கள்.

இதனால், நம்மை முழுமையாக இயக்கும் கட்டுப்பாடு நம் மேல் மனதுக்கு அல்லது தர்க்க மனதுக்குக் கிடைக்கும். நாம் நமக்கு நம் வாழ்வில் தேவையான லூசிட் கனவு வழியே ஆழ்மனதுக்குச் சொல்லி, வேண்டியதை நிறைவேற்றிக் கொள்ளலாம். நம்மை நாமே மாற்றிக் கொள்ளலாம் என்று லூசிட் கனவில் தேர்ந்த உளவியல் நிபுணர்கள் செல்கிறார்கள். லூசிட் ட்ரீம் நம் வாழ்வை நாமே வடிவமைக்க உதவும் அட்சயபாத்திரம், தியானத்தைவிட வலிமையான டெக்னிக் என்கிறார்கள்.

## ஈடிசியாவின் உறுப்பினர்களின் முக்கிய கவனத்திற்கு ...

**2021-22ம் நிதியாண்டுக்கான உறுப்பினர் சந்தா தொகையை அனைவரும் விரைவில் ஈடிசியா அலுவலகத்தில் செலுத்தி தங்கள் உறுப்பினர் பதிவை புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஈடிசியாவின் உறுப்பினர்களில் 2018-19, 2019-20, 2020-21-ம் ஆண்டிற்கான சந்தா தொகை ஒரு சிலரிடமிருந்து மட்டும் நிலுவை உள்ளது. இதுவரை செலுத்தாத உறுப்பினர்கள் விரைவில் ஈடிசியா அலுவலகத்தில் செலுத்தி புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**தொகையை ரொக்கமாகவோ/காசோலை/வங்கி வரைவு மூலமாக EEDISSIA என்ற பெயரில் ஈடிசியா அலுவலகத்திற்கு அனுப்பிவைக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**NEFT :** On line payment **செய்ய EEDISSIA என்ற பெயரில் Canara Bank, Main Branch, Cutchery Road, Erode. Account No.: 1104101015362 IFSC No.: CNRB 0001104 மூலமாக செலுத்தவும்.**

**தொகை செலுத்திய விபரங்களை அலுவலகத்தில் தெரிவித்து இரசீது பெற்றுக்கொள்ள கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.**

**Copy of :**

**Circular No. 64/38/2018-GST**

# CBEC/20/16/03/2017-GST
# Government of India
# Ministry of Finance
# Department of Revenue
# Central Board of Indirect Taxes and Customs
# GST Policy Wing

✶✶✶

New Delhi, Dated the 14th September, 2018

To

The Principal Chief Commissioners / Chief Commissioners / Principal Commissioners / Commissioners of Central Tax (All) / The Principal Directors General / Directors General (All)

Madam/Sir,

**Subject: Modification of the procedure for interception of conveyances for inspection of goods in movement, and detention, release and confiscation of such goods and conveyances, as clarified in Circular Nos. 41/15/2018-GST dated 13.04.2018 and 49/23/2018-GST dated 21.06.2018 - regarding.**

Kind attention is invited to Circular No. 41/15/2018-GST dated 13th April, 2018 as amended by Circular No. 49/23/2018-GST dated 21st June, 2018 vide which the procedure for interception of conveyances for inspection of goods in movement, and detention, release and confiscation of such goods and conveyances was specified.

2. Various representations have been received regarding imposition of penalty in case of minor discrepancies in the details mentioned in the e-way bill although there are no major lapses in the invoices accompanying the goods in movement. The matter has been examined. In order to clarify this issue and to ensure uniformity in the implementation of the provisions of the law across the field formations, the Board, in exercise of its powers conferred under section 168 of the Central Goods and Services Tax Act, 2017 (hereinafter referred to as 'the CGST Act') hereby clarifies the said issue hereunder.

3. Section 68 of the CGST Act read with rule 138A of the Central Goods and Services Tax Rules, 2017 (hereinafter referred to as 'the CGST Rules') requires that the person in charge of a conveyance carrying any consignment of goods of value exceeding Rs 50,000/- should carry a copy of documents viz., invoice/bill of supply/delivery challan/bill of entry and a valid e-way bill in physical or electronic form for verification. In case such person does not carry the mentioned documents, there is no doubt that a contravention of the provisions of the law takes place and the provisions of section 129 and section 130 of the CGST Act are invocable. Further, it may be noted that the non-furnishing of information in **Part B** of **FORM GST EWB-01** amounts to the e-way bill becoming not a valid document for the movement of goods by road as per Explanation.

(2) to rule 138(3) of the CGST Rules, except in the case where the goods are transported for a distance of upto fifty kilometres within the State or Union territory to or from the place of business of the transporter to the place of business of the consignor or the consignee, as the case may be.

4. Whereas, section 129 of the CGST Act provides for detention and seizure of goods and conveyances and their release on the payment of requisite tax and penalty in cases where such goods are transported in contravention of the provisions of the CGST Act or the rules made thereunder. It has been informed that proceedings under section 129 of the CGST Act are being initiated for every mistake in the documents mentioned in para 3 above. It is clarified that in case a consignment of goods is accompanied by an invoice or any other specified document and not an e-way bill, proceedings under section 129 of the CGST Act may be initiated.

5. Further, in case a consignment of goods is accompanied with an invoice or any other specified document and also an e-way bill, proceedings under section 129 of the CGST Act may not be initiated, inter alia, in the following situations:

a) Spelling mistakes in the name of the consignor or the consignee but the GSTIN, wherever applicable, is correct;

b) Error in the pin-code but the address of the consignor and the consignee mentioned is correct, subject to the condition that the error in the PIN code should not have the effect of increasing the validity period of the e-way bill;

c) Error in the address of the consignee to the extent that the locality and other details of the consignee are correct;

d) Error in one or two digits of the document number mentioned in the e-way bill;

e) Error in 4 or 6 digit level of HSN where the first 2 digits of HSN are correct and the rate of tax mentioned is correct;

f) Error in one or two digits/characters of the vehicle number.

6. In case of the above situations, penalty to the tune of Rs. 500/- each under section 125 of the CGST Act and the respective State GST Act should be imposed (Rs.1000/- under the IGST Act) in **FORM GST DRC-07** for every consignment. A record of all such consignments where proceedings under section 129 of the CGST Act have not been invoked in view of the situations listed in paragraph 5 above shall be sent by the proper officer to his controlling officer on a weekly basis.

7. Difficulty, if any, in implementation of this Circular may please be brought to the notice of the Board. Hindi version would follow.

**(Upender Gupta)**

Commissioner (GST)




# சிறப்பு பொதுக்குழு கூட்டம்

ஈரோடு மாவட்ட சிறுதொழில்கள் சங்கத்தின் சிறப்பு பொதுக்குழுக் கூட்டம் 10.01.2022 அன்று மாலை 06.30 மணிக்கு ஈடிசியா சக்தி மசாலா அரங்கில் சங்கத் தலைவர் திரு.P.திருமூர்த்தி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அதுசமயம் கீழ்கண்ட பொருள்கள் குறித்து விவாதித்து முடிவு செய்யப்பட்டது.

சங்கத் தலைவர் திரு.P.திருமூர்த்தி அவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்த சங்கத்தின் முன்னாள் தலைவர்கள், உறுப்பினர்கள், செயற்குழு மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்களை வரவேற்று தனது உரையில் தற்போது கொரோனா நெறிமுறைகளை அனைத்து நிறுவனங்களும் தவறாது பின்பற்ற வேண்டும் என மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ள தாகவும் தவறும் நிர்வாகங்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என தெரிவித்தார்.

சங்கத்தின் செயல்பாடுகள் குறித்து இணை செயலாளர் திரு.A.சரவணபாபு அவர்கள் வாசித்து சபையின் ஒப்புதல் பெறப்பட்டது.

சங்கத்தின் வரவு செலவு கணக்குகளை சங்கப் பொருளாளர் திரு.S.பழனிவேல் அவர்கள் வாசித்து சபையின் ஏகமனதான ஒப்புதல் பெறப்பட்டது.

புதிய உறுப்பினர்களை சங்கத்தின் துணைத் தலைவர் திரு.V.T.ஸ்ரீதர் அவர்கள் அறிமுகம் செய்து வைத்தார்.

ஈடிசியா சென்டர் பிரைவேட் லிமிடெட் புதிய புராஜக்ட் பற்றியும் நிலம் வாங்கியதில் இருந்து இன்று கட்டிடம் கட்டுவதற்கு ஒப்புதல் பெற்றது வரை அனைத்து விபரங்களையும் விரிவாக சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு.K.வெங்கடேஸ் அவர்கள் விளக்கி கூறினார்.

சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு.R.சுப்ரமணியன் அவர்கள் தீர்மானங்களை வாசித்துக் காட்டி சபையின் கரவொலி மூலம் ஏகமனதாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இவற்றை சங்கத் துணை விதிகளில் (By laws) திருத்தங்கள் மற்றும் சேர்த்தல்கள் தேவைப்படுவதால் அவற்றை மேற் கொள்ள சபையின் ஒப்புதல் பெறப்பட்டது.

கூட்டத்தின் முடிவில் சங்கச் செயலாளரான திரு.R.ராம்பிரகாஷ் அவர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்க கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.



# EEDISSIA Welcome its New Members



**SRI AMMAN FIBRE**
Manufactuering of Coir Fibre,
SF.No.249 / 4A1 Sembulicham Palayam,
Athani - Erode- 638 502
**Mob : 99940 33368**

**ETIAM RESEARCH PRODUCTS & SERVICES (P) LTD**
Service of Eleconic Commerce
Block b,35, 2nd Floor, Sampath Nagar,
Erode-638 011. **Mob : 99529 10062**

**ASM BUILDING SOLUTIONS**
Manufacturing of Hallow Block & Bricks,
391 Annaikattu Road,
Opp. Brindhavan Mahal,
Surampatti Valasu, Erode-638 009.
**Mob : 99428 60423**

**SENTHIL SOLAR**
Manufacturing of Solar Products
5/244 Milk Diary Street,
Villarasampatti Four Rd.,
Thindal (Po) , Erode-638 009.
**Mob : 96550 79555 / 79044 03020**

**GURU AQUA FARM**
Manufacturing of
Packged Drinking Water
21/1 Palani Andavar Koil Thottam
Seetharampalayam (PO), Tiruchengode ,
Namakkal Dt-637 209.
**Mob : 94871 30303**

**MANIAN MEDICAL CENTRE**
Service of Hospital
61 Chinamuthu Street,
Idiyankattu Valasu,
Erode- 638,001
**Mob : 99947 44482 , 85319 19191**

**GLOBBAL COCO**
Manufacturing of Coir Fibre and Pith
146/2 Semmadaikadu,
Muruangatholuvu Village
Chennimalai - 638 051
**Mob : 93446 18418**

**EROKART**
Service of Smart Phone & Tablet Based
Microscope Lenses Trading
7/469 Dasampalayam, Pulavakali Palayam
Mannuvaikkal, Erode-638 476
**Mob : 74020 60606**

**PRIYA ENTERPRISES**
Service of Printing Industry
H- 57-A, Amman Nagar,
Manickamalayam Housing Unit,
Erode-638 001
**Mob : 99522 70522**

**NEW BRIGHT CHEMICALS**
Manufacturing of Sodium Sulphide
Solution
67, E.P.B Nagar,
Mariamman Kovil St.,
Soolai , Erode-638004.
**Mob : 98425 79927**

**BILWA BUSINESS SOLUTIONS**
Manpower Consultancy
Service of Digital Marketing Agency
19C,2nd Floor, Mughil Complex,
Kumaragurubaran Street,
Sathy Road, Erode-638 003
**Mob : 99522 79704**

**ESK FOODS ANIMAL FEEDS FERTILIZERS**
Organic Foods, Feeds and Organic
84, Jeevanatham Street
Kollam Palayam , Erode -638002
**Mob : 97389 14047**

**PROFILE TRACE**
Service of HR Training and Solutions
134, VNM Complex,
Near RR Lodge,
Erode-638003
**Mob : 93641 54041**

**CAUVERY ENGINEERINGS**
Laser Cutting , Metal Fabrication
Steel Construction
23/4, Perundurai Road,
Opp Reliance Mall,
Erode-638 011.
**Mob : 95009 40046**

**SRI GOPAL TRANSPORT**
Transport
82/5 Kandasamy Street,
Near New Mastid Corner,
Erode-63 8003
**Mob : 93101,17944**

**CHAKRAVARTHY PLASTIC INDUSTRIES**
Plastic Industry
3/112A, Thingalur Road,
Chinnaveerasangili, Vijayamangalam,
Perundurai, Erode-638056
**Mob : 98430 43141**

**AGARAM PRINTERS**
Offset Printing
99, Cutchery Street, Erode- 638001
**Mob: 95140 21606, 98940 13138**

**FORTUNE TEXTILES INDUSTRIES**
**Textiles Lung Fab Finishers**
69/1 Vivekanandar Salai
Veerappampalayam Pirivu
Nasiyanoor Road, Erode-638 012.
**Mob: 94430 52528**

**BHAVANI JEGGERY CLUSTER P. LTD**
Jaggery Power Product
92, Athant village , Anthiyur Tk
Erode - Dt -638 502
**Mob : 94437 45837, 99940 33368**

**SUNDARAM FIRE SAFE**
Fire and Safety
30/31, Sidhanatha Nilayam
Akilmedu 6th St, Kalyan Silks Backside,
Erode- 638001
**Mob: 73055 22555, 95245 22777**

**SHREE THAMARAJ KANNAN STORES**
Grocessry Wholesale Cold Storage
38, East Kongalamman Kovil Street
Erode- 638 001
**Mob : 94433 40028**

**EROMART**
Cash Counting Machines , Billing
Machines, Office - Home Automations
4th Floor, Laakini Toners, Brough Road ,
Erode-638 001
**Mob : 94443 07037**

**CLIFFTON INFRASTRUCTURE PVT LTD**
C.U.I
10 Kandappa Street, Kikolan Thottam,
Erode-638 001
**Mob: 97152 24356**

# Circular No. 64/38/2018-GST -ன் தமிழாக்கம்

**GST EWAY - BILL -ல் ஏதாவது Technical Mistake கண்டுபிடிக்கப்பட்டால் அதிகபட்சமாக ரூ.1000/= (500+500) வசூலித்தால் போதும்-மத்திய அரசு அறிவிப்பு.**

**Ref : Circular No : 64/38/2018-GST/Dt.14/09/2018.**

வணிக நிமித்தமாக சரக்குப் போக்குவரத்து நடைபெறும் போது தமிழ்நாட்டிற்குள் ரூ.ஒரு லட்சம் தாண்டும் போதும் வெளி மாநிலத்திற்கு சரக்குகள் அனுப்பப்படும் போது ரூ.50,000/– தாண்டும் போதும் E-WAYBILL என்னும் மின்வழிச் சீட்டினை அரசின் இணைய தளத்தில் பதிவு செய்து அனுப்ப வேண்டியது அவசியம் என்பது அனைவரும் அறிந்ததே .

அவ்வாறு மின்வழிச்சிட்டு அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் technical mistake என்னும் சின்னச் சின்னத் தவறுகளுக்குக்கூட அதிகபட்ச தண்டனைத் தொகை வசூலிக்கும் சூழ்நிலை உருவானது.

அதனைபற்றி நமது சங்கம் உட்பட பலர் அரசுக்கு ஏற்படுத்தக் கூறியதால், அரசு, அதனைத் தீர்க்கும் விதமாக 14.9.2018 அன்று, சர்குலர் எண். 64/38/2018-GST வாயிலாக, எந்தெந்த சிறு தவறுகளுக்கு எவ்வாறு தண்டனை தொகை நிர்ணயிக்க வேண்டும் என தெளிவுபடுத்தி உள்ளது. அதன் விபரமானது:–

பொதுவாக சரக்குப் போக்குவரத்தின் போது பில் அல்லது டெலிவரி சலான் என்பது போன்ற ஆவணங்கள் சரக்குடன் அனுப்பப்பட வேண்டியது அவசியம் என்பது அனைவரும் அறிந்ததே. எனினும் சரக்குப் போக்குவரத்தின் போது அடிக்கடி பிரச்சனை ஏற்படுகிறது. இவற்றில் எவை technical mistake என்பது பல வணிகர்கள் அறியாதது. ஆகவேதான் இதனை எழுதுகிறோம்.

தற்போது E-way bill–ல் ஏற்படும் சின்னச் சின்னத் தவறுகள் பற்றி காணலாம்.

**உதாரணம் (1) :** விலாசத்தில் ஏற்படும் தவறுகள் உதாரணமாக பில்லில் சரியான விலாசம் உள்ளது. சரியான விலாசம் XXXXXXXXX, 49, காந்தி ரோடு, பழனி. பில்லில் சரியான விலாசத்தினை எழுதிவிட்டார். ஆனால் E-way bill-ல் தவறுதலாக 47, காந்தி ரோடு, பழனி என்று டைப் அடித்து விட்டனர். ஆனால் GST எண் சரியாக உள்ளது. இவ்வாறு ஏற்பட்டு விட்டால் அது technical mistake எனப்படும். இவ்வாறு ஏற்பட்டுவிட்ட தவறுக்கு அதிகபட்சமாக ரூ.1000/– மட்டும் வசூலித்தால் போதும் என்பதுதான் சர்குலர் 64ல் அரசு கூறியுள்ளது. அதற்காக நாம் நமது நன்றியினை அரசுக்கு தெரிவித்து கொள்வோமாக....

**இரண்டாவது உதாரணம் : ERROR IN PINCODE**

சரக்கு சென்னையிலிருந்து மதுரைக்கு அனுப்படு கிறது. சரியான விலாசம் : 9 சம்மந்திமுர்த்தி தெரு, மதுரை–625001 (தூரம்500 K.M).E-way bill–ல் பின்கோடு எண் 625007 என்று தவறுதலாகப் பதியப்பட்டு விட்டது. சரக்கு மதிப்பு ரூ.2,50,000/– + வரி 12,500. இந்தச் சூழ் நிலையில் பொதுவாக அதிகாரி 12,500+12,500 மொத்தம் 25,000 கட்டவேண்டும் என்று சொல்வார். அவ்வாறு வசூலிக்கத் தேவையில்லை என்று அதிகபட்சமாக ரூ.1000 (500+500) வசூலித்தல் போதுமானது.

**மற்றொரு உதாரணம்:**


**ERROR IN ADDRESS BUT OTHER DETAILS ARE CORRECT**

சரக்கு சென்னையிலிருந்து மதுரைக்கு அனுப்பப் படுகிறது சரியான விலாசம் : 9 சம்மந்தமூர்த்தி தெரு, மேலமாசிவீதி, மதுரை–625001 ஆனால் E-way bill–ல் தவறுதலாக, 9 சம்மந்தமூர்த்தி தெரு, கீழமாசி வீதி, மதுரை என டைப் செய்யப்பட்டுள்ளது. ஆனால் GST-எண் சரியாக உள்ளது. இதுவும் ஒரு technical mistake தான். இவ்வகைத் தவறுகளுக்கு ரூ.1000/– தண்டத் தொகை வசூலித்தால் போதும்.

**மற்றொரு உதாரணம் : ERROR IN HSN CODE**

சரக்கின் சரியான HSN Code 10922040. ஆனால் E-way bill–ல் 10922848 என தவறுதலாக type செய்யப் பட்டுள்ளது. அல்லது 1093 என்று மட்டும் தவறுதலாக பதியப்பட்டுவிட்டது. இவ்வாறான சூழ்நிலையில் HSN Code–ல் முதல் இரண்டு எண்கள் மட்டும் சரியாக எழுதியிருக்கும் பட்சத்தில் இதற்கு ரூ.1000/– மட்டும் தண்டத் தொகை வசூலித்தால் போதும்.

**மற்றொரு உதாரணம் :** சரக்கு அனுப்பப்பட்ட லாரி எண்: TN-58-SN-1084 ஆனால் லாரி எண்களில் ஒரு இலக்கமோ அல்லது இரண்டு இலக்கமோ தவறு தலாக பதியப்பட்டுவிட்டது எனக் கொள்ளவோம்; உதாரணமாக TN-68-SV-1084 என்றோ TN-58-SN-1094 என்றோ தவறுதலாக பதியப்பட்டு விட்டது எனக் கொண்டால் இந்த வகை தவறுகளுக்கு அதிகபட்சமாக ரூ.1000/– வசூலித்தால் போதுமானது என்பதே இந்த சர்க்குலரின் விளக்கம். வணிகர்கள் நலன் கருதி மேற்படி சர்க்குலர் எண் 64 இந்த இதழில் பிரசுரிக்கப் பட்டுள்ளது.



# பிளாஸ்டிக் பாட்டில்கள் முகக்கவசம்

**கொ**ரோனா தொற்றின் காரணமாக முகக் கவசம் அணிவது நமக்குப் பழக்கமாகி விட்டது. பொதுமுடக்கம் தளர்த்தப்பட்டு நிறுவனங்கள், தொழிற்சாலைகள், அலுவலகங்கள் இயங்கத் தொடங்கிய பிறகு, முகக்கவசத்தின் தேவை அதிகரித்துக் கொண்டே போகிறது.

சாலையோரத்தில் விற்கப்படும் முகக் கவசங்கள் முதல் பெரிய மருந்துக் கடைகளில் விற்கப்படும் முகக்கவசங்கள் வரை முகக்கவசங்களின் தயாரிப்பு பலமடங்கு அதிகரித்துள்ளது. விற்கப்படும் எல்லா முகக்கவசங்களும் கொரோனா தீநுண்மியைத் தடுத்து நிறுத்தும் திறன் உடையதாக இருக்குமா? என்ற ஐயம் எழுவது இயல்பானதே.

இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் ஹிமாச்சல பிரதேசத்தின் மண்டி நகரில் உள்ள இந்திய தொழில் நுட்பக் கழகத்தைச் (ஐஐடி–மண்டி) சேர்ந்த மாணவர்கள், ஒரு வித்தியாசமான முகக் கவசத்தை உருவாக்கியிருக்கிறார்கள்.

ஐஐடி – மண்டியில் என்ஜினியரிங் துறையில் உதவிப் பேராசிரியராகப் பணிபுரியும் சுமித் சின்ஹா ரே என்பவரின் தலைமையிலான ஆராய்ச்சியாளர்கள் குழு இந்த முகக்கவசத்தை உருவாக்கியிருக்கிறது. இந்தக் குழுவில் ஆராய்ச்சி மாணவர்களான ஆஸ்ஹிஸ் சுகோரியா, ஷீஷேங் சிங் சாண்டெல் ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர்.

பிளாஸ்டிக் பாட்டில்களை அதிகமாகப் பயன்படுத்தி, அவற்றைத் தூக்கியெறிந்து பிளாஸ்டிக்கால் ஏற்படும் சுற்றுச்சுழல் கேடுகளை பல நாடுகள் ஏற்படுத்தி வருகின்றன. அப்படிப்பட்ட நாடுகளில் பிளாஸ்டிக் சுற்றுச்சூழல் கேடு ஏற்படுத்தும் 15–ஆவது பெரிய நாடாக நம் நாடு இருக்கிறது. ஒவ்வொரு நாளும் சுமார் 26 ஆயிரம் டன் பிளாஸ்டிக் கழிவுகளை நாம் வெளித் தள்ளுகிறோம்.

கொரோனா தொற்று ஏற்பட்டவுடன் ஆன்லைன் மூலம் உணவு மற்றும் பொருள்களை வாங்குவது அதிகரித்திருப்பதும் பிளாஸ்டிக் பயன்பாட்டை அதிகப் படுத்தி இருக்கிறது.

இந்நிலையில்தான் ஐஐடி–மாணவர்கள் இந்த முகக்கவசத்தை உருவாக்கியிருக்கிறார்கள்.



அவர்கள் உருவாக்கியிருக்கிற முகக்கவசம் உண்மையிலேயே கொரோனா தொற்றிலிருந்து நம்மைப் பாதுகாக்குமா? பிளாஸ்டிக் பாட்டில்களிலிருந்து முகக் கவசத்தை எப்படிச் செய்கிறார்கள்? இப்படி பல கேள்விகள்.

ஐஐடி–மண்டி ஆராய்ச்சியாளர்கள் முதலில் பிளாஸ்டிக் பாட்டில்களை துண்டு துண்டாக உடைத்து தூளாக்குகிறார்கள். அவற்றை சில திரவங்களில் போட்டு கலக்குகிறார்கள். திரவங்களில் பிளாஸ்டிக் பாட்டில்கள் கலந்து விடுகின்றன. அந்தக் கலவையில் இருந்து நானோ ஃபைபரை எடுக்கிறார்கள். பிரித்தெடுக்கப்பட்ட அந்த பிளாஸ்டிக் நானோ ஃபைபரைப் பயன்படுத்தி முகக்கவசங்களைத் தயாரிக்கிறார்கள்.

இவர்கள் தயாரித்திருக்கும் முகக்கவசத்தில் பயன்படுத்தப்படும் நானோ ஃபைபர் மனித முடியை விட 250 மடங்கு மெல்லியது. மனித முடி 50 மைக்ரோ மீட்டர்கள் அளவு பருமனானது. அதாவது 0.05 மில்லி மீட்டர் அளவு பருமனானது. அதைவிட 250 மடங்கு நானோ ஃபைபர் மெல்லியது.

அவ்வளவு மெல்லியதான நானோ ஃபைபரை நெருக்கமாகப் பின்னி அதன் மூலமாக செய்யப்படும் முகக் கவசத்தின் ஊடாக கொரோனா தீநுண்மி உள்ளே புக வாய்ப்பில்லை என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

தீநுண்மி, பாக்டீரியாக்கள், இதர கிருமிகளை உள்ளே விடாமல் ஒரு முகக்கவசம் தடுக்க வேண்டும். மூச்சு விடுவதைச் சிரமமாக்கக் கூடாது. இந்த இரண்டு தன்மைகளும் ஏற்கெனவே தயாரித்து விற்கப்படுகிற முகக்கவசங்களில் எந்த அளவுக்கு இருக்கிறது என்று பார்த்தால் அவற்றில் பல குப்பைக் கூடைகளில் போடும் தரத்தில்தான் உள்ளன. பல முகக்கவசங்களில் இந்த இரண்டு தன்மைகளும் இருப்பதில்லை. தீநுண்மிகளைத் தடுக்கும் திறன் உடைய சில முகக் கவசங்களை அணிந்தால் மூச்சு விட எளிதாக இருந்தால் தீநுண்மிகள் தடுக்கப்படுவதில்லை. "நாங்கள் தயாரித்திருக்கும் நானோ ஃபைபரைக் கொண்டு தயாரிக்கப்படும் முகக் கவசங்களின் செயல்திறன் உண்மையிலேயே வியப்படைய வைக்கிறது. மருத்துவப் பணியாளர்கள் பயன்படுத்தும் பல முகக் கவசங்கள் கூட மூச்சு விடுவதைச் சிரமமாக்கி விடுகின்றன. நாங்கள் தயாரித்திருக்கும் நானோ ஃபைபர் முகக் கவசம் இந்தக் குறைகள் இல்லாமல் இருக்கிறது. மூச்சுவிட எளிதாக இருப்பதுடன் 98 சதவிகிதம் தீநுண்மிகளை உள்ளே விடாமல் தடுக்கும் திறன் உடைய தாகவும் இருக்கிறது" என்கிறார் ஆராய்ச்சிக் குழுவின் வழிகாட்டியாகச் செயல்பட்ட சுமித் சின்ஹா ரே.

பிளாஸ்டிக்கைப் பயன்படுத்தி நானோ ஃபைபரை உருவாக்கும் முயற்சியில் 2016–ஆம் ஆண்டு முதலே இந்தக் குழுவினர் ஈடுபட்டு வந்திருக்கின்றனர். 2020இல் கொரோனா தொற்று ஏற்பட்டதும் இவர்கள் முழுமூச்சுடன் இந்தப் பணியில் ஈடுபட்டு, முகக் கவசத்தை தயாரித்திருக்கின்றனர்.

சோதனை நிலையில் உள்ளது இந்த முகக்கவசத் தயாரிப்பு. ஒரு முகக்கவசத்தின் தயாரிப்பு விலை ரூ.25ஆக உள்ளது என்றாலும், பெரிய அளவில் தயாரிக்கும் போது விலை பாதியாகக் குறைய வாய்ப்புள்ளது என்கிறார்கள்.

பிளாஸ்டிக் கழிவுகளால் ஏற்படும் சுற்றுச் சூழல் பாதிப்பைத் தடுக்கும் விதமாக உருவாக்கப்பட்டுள்ள இந்த முகக்கவசத்தை அதிக அளவில் பயன்படுத்தினால் – பயன்படுத்தி விட்டு தூக்கியெறிந்தால்–அது சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாதா? என்ற கேள்வி இயல்பாக எழுகிறது.

"இந்த முகக்கவசத்தை மீண்டும் மீண்டும் பயன் படுத்தலாம். ஒரு முகக்கவசத்தை குறைந்தது 30 முதல் 40 தடவைகள் வரை பயன் படுத்தலாம். அப்படிப் பயன்படுத்தி தூக்கியெறியப்படும் முகக்கவசங்களை மீண்டும் சுழற்சி முறையில் நானோ ஃபைபர்களாக மாற்றி மீண்டும் மீண்டும் முகக்கவசங்களைச் செய்து கொண்டே இருக்கலாம்" என்கிறார் சுமித் சின்ஹா ரே.

இந்த முகக்கவசம் ஒருபுறம் பிளாஸ்டிக் கழிவுகளால் ஏற்படும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கிறது; இன்னொரு புறம் தீநுண்மித் தொற்றிலிருந்து மனிதர்களைப் பாதுகாக்கிறது. இரட்டைப் பயன்கள் இந்த முகக்கவசத்தில்... ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை அடிப்பதைப் போல !.

நன்றி: **தினமணி**

# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாகத அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை - 600 032.
தொலைபேசி : ++91-044-2953 5806 /2953 5816 தொலைநகல் : ++91-044-2953 5893
மின்னஞ்சல் : +tnerc@nic.in இணைய தளம் : www.tnerc.gov.in


நாள் : 15-11-2021

## <u>செய்திக் குறிப்பு</u>

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், சூரிய ஒளி மின்சாரப் பயன்பாட்டினை தமிழ்நாட்டில் ஊக்குவிக்கும் பொருட்டு பெரும் நடவடிக்கையாக, கீழ்க்கண்ட மூன்று வகைகளில் சூரிய ஒளி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் நிலையங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளையும், கட்டணங்களையும் நிர்ணயம் செய்துள்ளது.

1. வீட்டு மின் நுகர்வோர்களுக்கு கூரை மேல் மற்றும் நிலத்தில் அமைக்கப்படும் வகைகளுக்கான “நெட் மீட்டரிங்” (Net Metering) முறை.
2. தொழில் மற்றும் பிற நுகர்வோர்களுக்கு கூரை மேல் மற்றும் நிலத்தில் அமைக்கப்படும் வகைகளுக்கான – “நெட் பில்லிங்” (Net billing) (அல்லது) “நெட் பீட்–இன்” (Net feed-in) முறை.
3. உயர் அழுத்த மின்நுகர்வோர்கள் மற்றும் மின்உற்பத்தி செய்பவர்கள் – நிலத்தில் அமைக்கப்படும் வகைக்கான – “கிராஸ் மீட்டரிங்” (Gross Metering) முறை.

ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட தகுதி அடிப்படை மற்றும் மின் கட்டண வீதப்பட்டியல் கீழ்க்கண்டவாறு:

<table>
<tr><th rowspan="2">வகை</th><th rowspan="2">தகுதி</th><th colspan="3">மின் அளவீட்டு முறை</th><th rowspan="2">மின் கட்டுமானத் தொகை</th><th colspan="3">பீட்-இன் கட்டணம்</th></tr>
<tr><th>நெட் மீட்டரிங்</th><th>நெட் பில்லிங்</th><th>கிராஸ் மீட்டரிங்</th><th>0-10 கி.வா.</th><th>11-150 கி.வா.</th><th>151 -999 கி.வா.</th></tr>
<tr><td>வீட்டு முறை உபயோகம் தாழ்வழுத்த வகை</td><td>அனுமதிக்கப் பட்ட பளு வரை</td><td>✓</td><td>✓</td><td>✗</td><td>20% 10 கி.வா. வரை<br>75% 10 கி.வா. மேல்</td><td rowspan="2">ரூ. 3.61</td><td rowspan="2">ரூ. 3.37</td><td rowspan="2"></td></tr>
<tr><td>வீட்டு உபயோகம் தவிர பிற உபயோகம் தாழ்வழுத்த வகை</td><td>அனுமதிக்கப் பட்ட பளு வரை</td><td>✗</td><td>✓</td><td>✗</td><td>ரூ. 1.27 யூனிட் வீதம் சூரிய ஒளி மூலம் தயாரிக்கப்பட்ட மொத்த யூனிட்டிற்கு (தாழ்வழுத்த வகை)</td></tr>
<tr><td>150 கி.வா. மேற்பட்ட நுகர்வோர்கள் (உயர் அழுத்த வகை)</td><td>151 -999 கி.வா.</td><td>✗</td><td>✓</td><td>✓</td><td>ரூ. 0.83 யூனிட் வீதம் சூரிய ஒளி மூலம் தயாரிக்கப்பட்ட மொத்த யூனிட்டிற்கு (உயர் அழுத்த வகை) கிராஸ் மீட்டரிங் அளவீடு முறையில் கட்டணம் இல்லை.</td><td rowspan="2"></td><td rowspan="2"></td><td rowspan="2">ரூ. 3.10</td></tr>
<tr><td>நுகர்வோர் அல்லாத பிற மின் உற்பத்தியாளர்கள்</td><td>151 -999 கி.வா.</td><td>✗</td><td>✗</td><td>✓</td><td>இல்லை</td></tr>
</table>

## கணக்கீட்டு முறை:

**நெட் மீட்டரிங் (Net Metering):**

- மின் கட்டமைப்புக்கு ஏற்றுமதி செய்யப்படும் மின்சார யூனிட்டுகள் மின் கட்டமைப்பிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு உபயோகிக்கப்படும் மின்சார யூனிட்டுகளில் கழிக்கப்படும். நிகர இறக்குமதி செய்யப்பட்ட மின்சார யூனிட்டுகள் நடைமுறையில் உள்ள மின் கட்டணத்தின் அடிப்படையில் கணக்கிடப்படும்.
- ஏற்றுமதி செய்யப்பட்ட மின் அளவு இறக்குமதி செய்யப்பட்ட மின் அளவை விட அதிகமாக இருக்கும் பட்சத்தில், நிகர ஏற்றுமதி மின் அளவு அடுத்த கணக்கீட்டில் வரவு வைக்கப்படும்.

**நெட் பில்லிங் (அல்லது) நெட் பீட்-இன் (Net Billing or Net Feed in) :**

- இறக்குமதி செய்யப்படும் மின்சார யூனிட்டுகள் நடைமுறையில் உள்ள மின் கட்டண அடிப்படையில் கணக்கிடப்பட்டு கழிக்கப்படும். ஏற்றுமதி செய்யப்படும் மின்சார யூனிட்டுகள் ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட மேற்கண்ட அட்டவணையில் உள்ள பீட்-இன் கட்டண அடிப்படையில் வரவு வைக்கப்படும்.
- இறக்குமதி செய்யப்பட்ட மின்சார யூனிட்டுகளின் பண மதிப்பிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட மின்சார யூனிட்டுகளின் பண மதிப்பு கழிக்கப்பட்டு, மீதமுள்ள செலுத்தப்பட வேண்டிய பண மதிப்பு கணக்கிடப்படும்.

**கிராஸ் மீட்டரிங் (Gross Metering):**

- சூரிய ஒளி மூலம் உற்பத்தி செய்யப்படும் அனைத்து மின் யூனிட்டுகளையும் உரிமதாரருக்கு விற்பது கிராஸ் மீட்டரிங் முறையாகும். இந்த முறை பகிரப்பட்ட மின் உற்பத்திக்கு மிகவும் பொருத்தமானதாகும்.
- ஏற்றுமதி செய்யப்படும் யூனிட்டுகளின் பண மதிப்பு மேற்கண்ட பீட்-இன் மின் கட்டணத்தின் அடிப்படையில் வரவு வைக்கப்படும்.

**வீட்டு உபயோக மின் நுகர்வோர்களுக்கான நன்மைகள் :**

- தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணை எண்.03/2019-ன்படி வழங்கப்பட்ட நெட் பீட்-இன் முறையின் கீழ் உள்ள மின்நுகர்வோர்கள் நெட் மீட்டர் முறைக்கு மாற்றிக் கொள்ள வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.


**கிராஸ் மீட்டர் முறையின் நன்மைகள்:**

- சொந்தமாக நிலம் வைத்திருக்கும் (மின்நுகர்வோராக இருக்க வேண்டிய அவசியமில்லை) அனைவரும், கிராஸ் மீட்டரிங் முறையில் சூரிய ஒளி மின் நிலையத்தை அமைக்கலாம்.
- அனுமதிக்கப்பட்ட மின் பளு 151 கிலோ வாட்டிலிருந்து ஆரம்பிப்பதால் (அதிகபட்சமாக 999 கிலோ வாட் வரை) சிறிய அளவு நிலம் உள்ள பொது மக்களும், குறைந்த அளவு முதலீட்டுடன் சூரிய ஒளி மின் நிலையத்தை அமைக்கலாம்.
- மேற்படி சூரிய ஒளி நிலையத்தை அருகிலுள்ள உயர் அழுத்த மின்னூட்டியுடன் குறைந்த செலவுடன் இணைக்கலாம். இதற்கென தனியாக துணை மின் நிலையம் வரை மின் கடத்தியை நிறுவத் தேவையில்லை.
- கிராஸ் மீட்டரிங் முறையானது விவசாய மின்னூட்டிகளுடன் இணைக்கும் விதத்தில் அமைக்கப்படும் பகிரப்பட்ட மின் உற்பத்தி நிலையங்களுக்கு மிகவும் பொருத்தமானதாகும்.
- பகிரப்பட்ட மின் உற்பத்தி நிலையங்களால் மின் இழப்பு பெருமளவு குறையும். மின் அழுத்தம் மேம்படும்.

**மின் சேமிப்பு அமைப்பின் நன்மைகள்:**

- சூரிய ஒளி மின்சாரம் மூலம் மின்சார சேமிப்பு முறையையும் அதற்குண்டான முதலீடுகளையும் ஊக்குவிக்கும் விதமாக, மின் தேவை அதிகமாக உள்ள நேரங்களில் சேமித்த மின்சாரத்தை மின் கட்டமைப்புக்கு கொடுக்கும் நிகர்வில் அவற்றிற்கு அதிகப்படியான மின் கட்டணம் அளிப்பதை, ஆணையம் டைம் ஆப் டே (Time-of-Day) சலுகை மின் கட்டண வீதப்பட்டியல் மூலம் அறிமுகப் படுத்தியுள்ளது. அதன்படி மாலை 18:00 மணியிலிருந்து 21:00 மணிவரை உள்ள மின் தேவை அதிகமாக உள்ள நேரத்தில் மின் சேமிப்பிலிருந்து மின் கட்டமைப்பிற்கு வழங்கப்படும் மின்சாரத்திற்கு 20% அதிகமாக கட்டணம் வழங்கப்படும்.
- மேற்கண்ட பொருள் தொடர்பாக, மேலும் விவரங்களுக்கு www.tnerc.gov.in என்ற இணைய தளத்தில் "Tariff Order" என்ற தலைப்பின் கீழ் Order No.8/2021 என்ற பகுதியில் பார்வையிடலாம்.

**செயலாளர்**
**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்**





# சேவைக்கே அர்ப்பணிப்பு

மருத்துவம் வணிகமயமாகி விட்ட இன்றைய நாளில் மருத்துவச் சேவை என்றால் என்ன வென்று உணர்த்தியவர் டாக்டர் வி. சாந்தா.

புற்றுநோய் என்றாலே உயிர் போய்விடும் என பலரும் பயந்து நடுங்கிய காலகட்டத்தில், புற்றுநோய் குணப்படுத்தக் கூடியது என்ற நம்பிக்கையை விதைத்து, புற்றுநோய் மருத்துவத்தில் சத்தமின்றி யுத்தம் செய்த ஈடு இணையற்ற வரலாறாக வாழ்ந்தவர்.

நோயாளிகளிடம் நம்பிக்கை ஏற்பட வேண்டும் என்று தனது வசிப்பிடத்தையும் மருத்துவமனை வளாகத்திலேயே மாற்றியமைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தார். டாக்டர். வி. சாந்தாவின் மறைவு, மருத்துவ உலகம் மட்டுமன்றி, புற்றுநோயிலிருந்து மீண்டவர்களின் மனதிலும் கேன்சர் இன்ஸ்டிடியூட்டின் ஊழியர்கள் மத்தியிலும் பெரும் இழப்பை ஏற்படுத்தியுள்ளது. அவரின் வாழ்க்கைப் பயணத்தை சற்றே அறிவோம்: சேவையில் அன்னை தெரசாவுக்கு இணையாக போற்றப்படும் எளிமை, எல்லோரிடமும் மென்மையாகப் பழகக்கூடிய தன்மை, முதுமையைப் பொருட்படுத்தாத இடைவிடாத உழைப்பு, அர்ப் பணிப்புடன் கூடிய மருத்துவச் சேவை ஆகியவை தான் டாக்டர் சாந்தாவின் 68 ஆண்டுக்கால அடையாளம்.

நோபல் பரிசு பெற்ற டாக்டர் சி.வி. ராமன், சுப்பிரமணியம் சந்திரசேகர் குடும்பத்தைச் சேர்ந்தவர் சாந்தா. 1927–இல் மார்ச் 11–இல் சென்னை விஸ்வநாதன் –பாலாபார்வதி தம்பதிக்கு மகளாகப் பிறந்தார். பள்ளிப் படிப்பிற்கு பிறகு, 1949–இல் மெட்ராஸ் மருத்துவ கல்லூரியில் சேர்ந்தார். படிப்பை முடித்த இவர், 1952–இல் சென்னை பல்கலை கழகத்தில் மகளிர் மருத்துவத்தில் டிப்ளமோ படித்தார். அதனைத் தொடர்ந்து, 1955–இல் மருத்துவத்தில் முதுகலை பட்டப்படிப்பை முடித்தார்.

ஒரு வருடம் கனடாவில் பணிபுரிந்த பின்னர், சுதந்திர போராட்ட வீரரும், இந்தியாவின் முன்னோடி பெண் மருத்துவருமான முத்துலட்சுமி ரெட்டி தொடங்கிய புற்றுநோய் மருத்துவமனையின் நிலைய மருத்துவ அதிகாரியாக பணியில் சேர்ந்தார். 12 படுக்கைகள் மட்டுமே இருந்த நிலையில் தற்போது அங்கு 450 படுக்கை வசதிகள் கொண்ட பிரம்மாண்ட மான மருத்துவமனையாக விளங்குகிறது. அங்கு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியின் மகன் கிருஷ்ண மூர்த்தியை தனது குருவாக ஏற்றுக் கொண்டு அடையாறு புற்றுநோய் மையத்தை உலகத் தரம்வாய்ந்த புற்றுநோய் சிகிச்சை மையமாக மாற்றினார்.

டாக்டர் கிருஷ்ணமூர்த்தி மறைவுக்குப் பின்னர் 1984–இல் அடையாறு கேன்சர் இன்ஸ்டிடியூட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்றார் டாக்டர் சாந்தா. புற்றுநோய் தொடர்பாக தேசிய மற்றும் சர்வதேச இதழ்களில் ஏராளமான கட்டுரைகள் எழுதிய அவர் புற்றுநோய் சம்பந்தமான ஏராளமான விரிவுரைகளை எழுதியுள்ளார்.

மகசேசே விருது, பத்மஸ்ரீ, பத்மபூஷண், பத்மவிபூஷண், அவ்வையார் விருது, அன்னை தெரசா விருது உள்ளிட்ட உலக அளவில் பல விருதுகளைப் பெற்றுள்ள டாக்டர் சாந்தா, விருதுகள் மூலம் கிடைக்கும் தொகை முழுவதையும், தான் சேவையாற்றிய புற்றுநோய் மருத்துவமனையின் வளர்ச்சிக்கே செலவு செய்தார்.



உலகில் எங்கே புற்றுநோய் ஆராய்ச்சி நடந்தாலும், புதிய மருந்துகள், புதிய மருத்துவ முறைகள் புற்றுநோய் மருத்துவமனையில் உடனே அறிமுகம் செய்வதில் ஈடுபாடு காட்டியவர் டாக்டர் சாந்தா.

எளிமை, பணிவு, அன்பு ஆகியவற்றைத் தன்னுடைய அடையாளமாகக் கொண்டு, புற்று நோயாளிகளுக்காக முக்கியமாக ஏழைகளுக்காகத் தன் வாழ்நாள் முழுவதும் இரவு பகல் பாராமல் உழைத்தும், புற்றுநோய்த் துறையில், பல்லாயிரக்கணக்கான மருத்துவர்களுக்கு சிறந்த வழிகாட்டியாகவும் திகழ்ந்தார்.

தன்னுடைய சேவைப் பணிக்கு எந்த இடைஞ்சலும் வந்து விடக்கூடாது என்பதற்காக திருமணம் செய்வதை விரும்பவில்லை. சேவையே தனது உயிர்மூச்சாகக் கொண்டு வாழ்ந்தவர். குடும்ப விழாக்களில் மட்டும் சொந்த பந்தங்களைச் சந்திப்பார். தனது தங்கை சுசீலா மீது மட்டும் அளவு கடந்த அன்பை காட்டி வந்தார். தனது ஓய்வு நேரத்தை புத்தக வாசிப்பிலேயே கழித்து வந்தார்.

நகைகளின் மீது துளியும் நாட்டமில்லாதவர், மெல்லிய தங்க செயின் ஒன்றை மட்டும் எப்போதும் அணிந்திருப்பார். அன்னை தெரசாவின் வெள்ளைநிற புடவை போன்று பழுப்பு நிற காட்டன் புடவைகளை மட்டுமே அணிவார். புற்றுநோயாளிகளுக்காக உதவுபவர்களிடம் அதிகம் மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தார்.

காலம் முழுவதும் சேவையே பெரிதெனக் கருதி வாழ்ந்து வந்த இந்த அடையாறு ஆலமரம் கடந்த ஆண்டு 2021 ஜனவரி மாதம் 19-ம் தேதி சாய்ந்தது. இவரின் புகழ், காலம் உள்ளவரை நிலைத்திருக்கும் என்கின்றனர் அவருடன் புற்றுநோய் களத்தில் நின்ற மருத்துவர்கள்.

நன்றி: ***தினமணி-மகளிர்மணி***

## அனைத்து தொழில்முனைவோர்கள் கவனத்திற்கு

**UDYAM REGISTRATION:**

**மத்திய அரசின் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்கள் அமைச்சகத்தின் 26.06.2020 தேதிய அறிவிக்கையின்படி 30.06.2020-க்கு முன்னர் பதிவு செய்துள்ள அனைத்து** SSI, MSME Certificate, EM-Part-II, Udyog Aadhaar Memorandum-UAM **பதிவுகளும் புதிய** UDYAM**-ல் மீண்டும் பதிவு செய்து கொள்ள வேண்டும். முந்தைய பதிவுகள் தற்போது செல்லாது. எனவே, அனைத்து தொழில் முனைவோர்களும் தொழில் பதிவை புதிய** UDYAM Registration**-க்கு மாற்றிக் கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறார்கள்.**

**PRIVATE JOBS :**

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 16.06.2020 அன்று துவக்கி வைக்கப்பட்ட தனியார் துறை வேலை வாய்ப்பிற்கென வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையினால் பிரத்யேகமாக வடிவமைக்கப் பட்ட** www.tnprivatejobs.tn.gov.in **என்ற இணைய தளத்தில் தங்கள் நிறுவனங்களை பதிவு செய்து கொள்ளலாம். வேலை தேடும் இளைஞர்களும் மேற்படி இணைய தளத்தில் பதிவு செய்வதால் தங்கள் நிறுவனத்திற்கு தேவையான தகுதியுள்ளவர்களை தேர்வு செய்து கொள்ளலாம். எனவே, மேற்கண்ட இணைய தளத்தில் பதிவு செய்து பயன் பெற கேட்டுக்கொள்கிறோம்.**




# நேர்மறைக் கருத்து கூறல்

**கருத்து கூறல் என்றால் என்ன ?**

கருத்து கூறுதல் என்பது இதுவரை சரியான மொழியாக்கத்தில் எழுதப்படவில்லை. மாறாக FEEDBACK என்பதன் நெருங்கிய மொழியாக்கம் ஆக வழக்கில் உள்ளது. நாமும் அதையே ஏற்போம். நேர்மறையான கருத்துக்களை எடுத்துக் கூறி பிரச்சினைகளின் தாக்கத்தை தீர்க்க உதவுவதே கருத்துக்கூறல் என்றால் மிகையாகாது. இதை எவ்வாறு செம்மைப்படுத்துவது.

- உடன் பணியாற்றுபவர்களின் பணியிலும், நலனிலும் கவனம் காட்டுதல்.
- சிறப்பாக செய்த வேலையை பாராட்டுதல்.
- தவறான நடத்தையை வழிமாற்றுதல்.
- ஆக்கபூர்வமான செயல் வகைகளைச் சுட்டிக் காட்டுதல்.
- கற்றலுக்கும் வளர்ச்சிக்கும் வழிகாட்டுதல்.
- உடன் பணியாற்றுபவர்களை ஊக்குவித்து, திறமைகளின் வெளிப்பாடுகளை அதிகரித்தல்.
- உடன் பணியாற்றுபவர்களிடம் நட்பு நாற்றுக்களை நடுதல்.
- வெளிப்படையான கருத்து பரிமாற்றம் மூலம் அனைவரின் பங்களிப்பையும் அதிகரித்தல்.

**கருத்து கூறல் எப்பொழுது பயனுள்ளதாகிறது.**

- சரியான சூழலில் அடிக்கடி கருத்துக்களை பகிர்ந்து கொள்ளுதல்.
- முறையான சரியான, சிறப்பான வெளிப்பாடுகளை சாதித்தல்.
- எதார்த்தமாக இருத்தல்.
- கூறுவது மட்டுமின்றி கேட்பதும் முக்கியமானது.
- முடிவான முடிவாக கூறாமல் பல கருத்துக்களில் ஒரு கருத்தாக வெளிப்படுத்துதல்.
- கூறிய கருத்துக்களை மறுபடியும் துருவிப் பார்த்து மாற்றங்களை ஏற்படுத்துதல்.

**கருத்து கூறுதலினால் ஏற்படும் அச்சம் தவிர்**

- கேட்பவர்கள் நம்மை வெறுக்கவோ அல்லது உறவில் பிரச்சினைகள் ஏற்படுமோ என்ற கவலையை புறம் தள்ள வேண்டும்.
- நாம் கூறும் கருத்துக்களை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்ற எண்ணத்தை ஏற்படுத்திக் கொள்ளாமலிருக்க வேண்டும்.
- கடந்த முறைகளில் யாரேனும் கருத்து கூறலை தவிர்த்து போயிருக்கிறார்களா அல்லது அதன்படி நடக்காமல் இருந்திருக்கிறார்களா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.
- அடுத்தவர்கள் அவரவர் வழிகளைத் தேர்ந்தெடுத் திருப்பார்கள். மேலும் நாம் கூறுவதை கேட்க மாட்டார்கள். ஏனென்றால் நம்முடைய கருத்துக்கள் அவர்களுக்கு உதவிகரமாக இருக்காது என்ற தவறான கருத்துக்களை தள்ள வேண்டும்.
- எதிர்ப்புகளையும், கொதித்தெழும் சூழ்நிலைகளையும் எண்ணி கவலை கொள்ளக் கூடாது. பணிபுரியும் இடங்களில் கருத்து கூறல்கள் தனிநபர் உறவுகளை பாதிக்கும் என்ற அச்சம் நிறுவனத்தின் நலனை வெகுவாக பாதிக்கும். சில நேரங்களில் பணியாளர்களிடம் நாம் கூறும் கருத்துக்கள் அவர்களின் வரவேற்பை

பெறால் இருக்கும். நாம் என்னதான் ஆக்கபூர்வமாகவும் அறிவு பூர்வமாகவும் தவறுகளை களைய அறிவுரைகளை கூறினாலும் மற்றவர்களின் முயலுக்கு மூன்று கால் மனப்பான்மை அவைகளை ஏற்றுக் கொள்ளாமல் தடுக்கும். அது போன்ற நேரங்களில் நுணுக்கமாக அணுகி பார்வையில் உள்ள நிறப் பாகுபாடுகளை மாற்றி சரியான நிறத்தை அடையாளம் காட்ட வேண்டும்.

எதிர்த்து எழுபவர்களின் ஆத்திரமும், கோபமும் மட்டுப் படும் வரை அமைதி காத்து அவர்களுக்கு புரியும் வண்ணம் கருத்து கூறுவது அவசியம். (இது என்ன என் தலையெழுத்தா, நாம் எதற்காக இவ்வாறு செய்ய வேண்டும். ஏன் அநாவசியமாக அடுத்தவரை பகைத்துக் கொள்ள வேண்டும்) கருத்து கூறுதல் குறைவான அளவினதாக இருக்க வேண்டும். ஏராளமான செய்திகளை தாராளமாக வாரி வழங்கும் போது கேட்பவர்கள் கொந்தளிப்பின் உச்சியில் இருப்பார்கள். எளிமையான ஒன்று இரண்டு கருத்துகளை தெளிவாக கூறுவதன் மூலம் உணர்ச்சி கொந்தளிப்பு அடக்கப்பட்டு அறிவு கண் கொண்டு கருத்துக்களைப் பார்க்கத் தோன்றும்.

முதலில் அடுத்தவரின் கருத்துக்களை முழுவதும் கேட்டு அவர்கள் முடித்த பிறகு சுருங்கக் கூறுதல் நன்று. மெதுவாக அமைதியாக, தெளிவாக கருத்துக்கள் கூறுவது அவசியம். என்ன, எப்படி, ஏன் நடந்தது என்பதை தெளிவாக எடுத்துக் கூறி மாற்றுப்பாதைக்கு வழிகாட்டுதல் அவசியம்.

நிறுவனத்தில் உயர்ந்தபட்ச இலக்குகளை எட்டியவர்கள் கருத்து கூறலை அனுமதிக்க மாட்டார்கள். ஆனால் அவர்களுக்கும் கருத்து கூறல் அவசியம். மிக அதிகபட்ச இலக்குகளை அடைந்தவர்களிடம் அவர்களின் செயல்களை பாராட்டி நன்றி கூறி தொடங்க வேண்டும். அவர்கள் செய்த சாதனைகளில் எத்தனை நேரங்களில் தன் சொந்த மற்றும் குழு சார்ந்த நிகழ்வுகளுக்காக நிறுவன இலக்குகளை அடையும் எண்ணத்தில் விட்டுக்கொடுத்துப் போயிருக் கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும்.

அதிகபட்ச இலக்குகளை அடைந்தவர்கள் சரியான திசையில் செல்கிறார்கள் என்று எண்ண முடியாது.

அவர்களும் தங்களை வளர்த்துக் கொள்ள வாய்ப்பு அளிக்க வேண்டும். பணியில் அடுத்து என்ன சாதிக்க வேண்டும், தடைகளை எவ்வாறு தாண்ட வேண்டும் என்பது பற்றி எடுத்துக் கூற வேண்டும். தனிநபர் பாதிப்பு, சாதனை இவைகளை தாண்டி நிறுவனத்துக்கு உயர்ந்தபட்ச இலக்கை எட்டியவர்கள் எவ்வாறு பயனுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.

## கருத்து கூறலின் சரியான சூழல்

கருத்துக்கூறுலை முக்கியமானதாக கொள்ள வேண்டும். நேர்மறையானதும், தவறை திருத்திக் கொள்வதும், கருத்து கூறுதலின் முக்கிய காரணிகள். தலைமை பொறுப்பில் இருப்பவர்கள் யாரேனும் கருத்து கூறுவார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்காமல், மற்றவர்கள் எவ்வாறு நேர்மறையாகவும், அதிக உற்பத்தி திறன்கள் உள்ளவர்களாகவும் மாற்றிக் கொள்ள வேண்டும் என்று கூற வேண்டும்.

நேர்மையான எண்ணங்களை அனைவரும் அறிந்த கொள்ளும் வண்ணம் உரக்கக் கூறி பாராட்ட வேண்டும். எதிர்மறை யான கருத்து கூறலை தனியாகவும் மற்றவர்கள் யாரும் எளிதில் அறிந்து கொள்ளவியலாத வகை யிலும் கூற வேண்டும். முயற்சியை பாராட்ட வேண்டுமே தவிர திறமைகளை பாராட்டக் கூடாது. ஒரு வேலைச்சூழல், முயற்சிகளை மதிக்கும் பொழுது அதிக திறமை வேகமாக வெளிப்படும். நேர்மறையான கருத்துக் கூறலை நல்ல முறையில் பணியாற்றுபவர் களிடம் கூறும்பொழுது அந்த செயல் உறுதிப் படுத்துகிறது.

சில நேரங்களில் உங்களுடைய நடவடிக்கை களை மாற்றிக் கொள்ள கருத்துக்களை கூறுகிறேன் என்பதைக் காட்டிலும், நான் உங்களுக்கு சில கருத்துக் களை கூறலாமா என்ற கேள்வி, தாராளமாக சொல்லுங்கள் என்பதைப் பெற்றுத்தரும். கருத்துக்கூறல் கலையை கற்றுத்தேற நேரமும் குவிந்த கவனமும் தேவை. மற்ற திறமைகளைப் போல சிலருக்கு கருத்து கூறுதல் எளிது. சிலருக்கு அது இயலாததாக இருக்கும். மேலே கூறிய கருத்துக்களை ஏற்றுக் கொண்டு அவைகளை நடைமுறைப்படுத்தினால் உங்களுடைய நடையையும், மொழியையும், கருத்தையும் மற்றவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்பதில் எள்ளவும் ஐயமில்லை. கருத்துக்கூற கற்றுக் கொள்ளுங்கள். கருத்துக் கூறி நிறுவனத்தில் பணிபுரிபவர் அதிகபட்ச இலக்குகளை எளிதாக அடைய உதவுங்கள்.

நன்றி: *தினமணி-இளைஞர்மணி*

L2(ebiz)/21304/2021

Office of the Commissioner of Labour
Teynampet, Chennai 600 006
Dated : 27-12-2021.

Memorandum

Sub : EBIZ - Labour Department - Online submission of Forms under Tamil Nadu Shops and Establishments Act and Tamil Nadu Industrial Establishments (National, Festival and Special Holidays) Act - Instruction issued - Regarding.

-----

The attention of all the enforcement officers is invited to the above subject.

In this regard they are strictly instructed not to receive hard copies of Forms mentioned below :

1) Form O under Tamil Nadu Shops and Establishments Act, 1947.
2) Form S under Tamil Nadu Shops and Establishments Act, 1947.
3) Form V under Tamil Nadu Industrial Establishments (National, Festival and Special Holidays) Act, 1958.

Further, they are also instructed that the above Forms should be received through online only.

Sd/...............
Additional Commissioner of Labour,
(Administration)
Chennai - 6.

To
As the Assistant Commissioners of Labour (Enforcement).

Copy to :
All Joint Commissioners of Labour.
All Additional Commissioners of Labour.

//Forwarded by Order//

For Additional Commissioner of Labour,
(Administration)
Chennai - 6.




‘உலக அளவில் அண்மையில் எடுக்கப்பட்ட ஆய்வில், கொரோனா பெருந்தொற்றால் மூடப்பட்ட அல்லது தொலைந்துபோன தொழில்களால் வேலைவாய்ப்பை இழந்தவர்கள், புதிய துறைகளில் வேலைவாய்ப்பை பெற ஆர்வம் காட்டுவதாக தெரிய வந்துள்ளது. இதுவரை பணியாற்றிய துறையில் வேலைவாய்ப்பு கிடைக்கா விட்டால், புதிய துறை சார்ந்த வேலையை தேர்ந்தெடுப்பது தான் சரியான முடிவாக இருக்கும். மாற்றுத்துறைச் சார்ந்த வேலைக்கு நம்மை தயார்ப் படுத்திக் கொள்ளத் தவறுவது புத்திசாலித்தனமான அணுகு முறையாக இருக்காது.

புதிய துறை சார்ந்த வேலையைத் தேர்ந்தெடுக்க முடிவெடுத்தால், அதற்கான வாய்ப்புகளை எப்படிக் கண்டறிவது? அதற்கும் வழியிருக்கிறது. ஆனால், புதிய துறை சார்ந்த வேலை மாற்றங்களுக்கு தயார்ப்படுத்திக் கொண்டு, வேலை வேட்டையில் இறங்க சில அணுகுமுறைகளைக் கையாள வேண்டும். அதற்கான வழிமுறைகள் இதோ.

***முன்முயற்சி அல்லது ஆய்வு*** : கொரோனா பெருந்தொற்றின் இக்கட்டான சூழலிலும் தப்பித்துக் கொண்ட அல்லது மறுமலர்ச்சி பெற்றுள்ள தொழில்துறைகள் எவை என்பதை ஆராய்ந்து அறியுங்கள். புதிய வேலை வாய்ப்புகளை வழங்கும் நிறுவனங்கள் எவை? அவை அளிக்கும் வேலைவாய்ப்புகள் எவை? அதற்கு தேவைப்படும் திறன்கள் எவை? அந்த வேலைக்கு தகுந்த தொழில் திறன் உங்களிடம் இருக்கிறதா? என்பதை ஆராயுங்கள்.

அடுத்து எந்த துறையில் என்ன வேலையை தேர்ந்தெடுப்பது என்பதை முடிவு செய்வதற்கு கொஞ்சம் கால அவகாசம் எடுத்துக் கொள்ளுங்கள். அவசர கதியில் எந்த முடிவுக்கும் வந்து விடாதீர்கள். தீர ஆராய்ந்த பிறகு, தக்க முடிவெடுங்கள்.

வேலைக்கு ஆள் எடுக்கும் நிறுவனங்களின் அணுகுமுறையும் மாறி இருக்கிறது. சமூக பராமரிப்புத் துறை சார்ந்த வேலைகளுக்கு வேலையிழந்த விருந்தோம்பல் துறை சார்ந்த வேலையாட்களை வேலைக்கு அமர்த்தும் போக்கு உள்ளது.

அதாவது, அதே துறையில் வேலை செய்தவர்களை காட்டிலும், வேறு துறையில் வேலை செய்தவர்களை வேலைக்கு எடுத்துக் கொள்கிறார்கள். வேறுதிறன்களை பயன்படுத்திக் கொள்ளும் போக்கு அதிகரித்து வருகிறது.

***தொடர்பு வட்டம்*** : தொழில்சார்ந்த சந்திப்புகள் பல புதிய தொடர்புகள், புதிய அறிமுகங்களை ஏற்படுத்திக் கொள்வதற்கு வசதியாக இருந்தது. கொரோனா பெருந்தொற்று அதற்கு இடையூறாக இருந்தாலும், புதிய தொடர்புகளை அல்லது அறிமுகங்களை ஏற்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புகளை அடைத்து விடவில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

பழைய தொடர்புகளோடு இணைந்திருங்கள், இணைய வழியில் நடக்கும் முறைசாரா நேர்காணல்கள் அல்லது மெய்நிகர் வேலைவாய்ப்பு முகாம்களில் கலந்து கொள்ளுங்கள். இது புதிய சந்திப்புகளுக்கும், புதிய அறிமுகங்களுக்கும் வழிவகுக்கும்.

இந்த தொடர்புகள் அல்லது அறிமுகங்கள் வழியாகத்தான் எந்தெந்த நிறுவனங்களில் புதிய வேலை வாய்ப்புகள் உள்ளன என்பன போன்ற விவரங்கள் தெரியவரும். சந்தைப்படுத்தல் வேலையை செய்து கொண்டிருந்தவர், கொரோனா பெருந்தொற்று காலத்தில் வேலையை இழந்துவிட்டார். எதுவும் செய்யாமலும் சோம்பிக் கிடக்காமல் புகைப்படக் கலைஞராக மாறிவிட்டார்.

தொடக்கத்தில் எல்லாருக்கும் இலவசமாகப் புகைப்படங்களை எடுத்துக் கொடுத்து வந்துள்ளார். அவர் எடுத்த புகைப்படங்கள் நன்றாக இருக்கவே, அந்த அறிமுகங்கள் வழியாக ஏராளமான புகைப்பட வாய்ப்புகள் கிடைத்துள்ளன.

இப்போது புதிய தொழில் வானில் சிறகடித்துப் பறந்து கொண்டு இருக்கிறார். அவரைப் போன்று தொடர்பு வட்டங்களை விரிவுப்படுத்திக் கொள்வது புதிய

வாய்ப்புகளைத் தேடுவதற்கு எளிய வாய்ப்பாக அமையும்.

**பழைய தொழிலோடு தொடர்புடைய புதிய தொழில் :** பழைய வேலையில் இருந்து புதிய வேலைக்கு செல்லும் போது, சில மனத்தடைகள் இருக்கும். அவற்றை உடைத் தெறிந்து புதியதை ஏற்பது பயனளிக்கும். ஏற்கெனவே செய்து வந்த வேலைக்குச் சம்பந்தம் இருக்கிறதா? என பார்க்கலாம். பழைய வாடிக்கையாளர்கள் அல்லது சம்பந்தப்பட்டவர்களை புதிய வேலையிலும் அணுகும் வாய்ப்புக் கிடைக்கலாம். பழைய வேலையில் பணி செய்த அதே பகுதியில் புதிய வேலை கிடைப்பது, எளிதில் பணியாற்றுவதற்கு உதவியான இருக்கும்.

புதிய வேலையைத் தேடும்போது, பழைய வேலையில் அனுபவித்த சில வாய்ப்புகள் கிடைக்கின்றனவா? என்று ஆராயலாம். அப்படி வாய்த்தால், அது புதிய வேலையைச் செய்வதற்கு அனுகூலமாக இருக்கும்.

**திறன் வளர் :** புதிய வேலைகளைத் தேடுவதற்கு முன்பு அவற்றுக்குத் தேவையான திறன்கள் உங்களிடம் இருக்கின்றனவா? என்பதை ஆராயுங்கள். இல்லாவிட்டால் கவலை வேண்டாம். புதிய வேலைக்குத் தேவையான திறன்களை வளர்த்துக் கொள்ளுங்கள். மத்திய, மாநில அரசுகள் திறன் மேம்பாட்டுக்கு பல்வேறு திட்டங்களை அறிமுகம் செய்துள்ளன. அவற்றை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். பெரும்பாலான திறன் மேம்பாட்டு பயிற்சிகள் இலவசமாகவே கிடைக்கின்றன. பொறியியல், சுற்றுலா, சமூக பராமரிப்பு, இயற்கை பாதுகாப்பு, உணவு பதனிடுதல், நிதி என ஏராளமான தொழில் களுக்கு பயிற்சி அளிக்கப்படுகின்றன.

**தன்விவரக் குறிப்பில் தக்கமாற்றம் :** புதிய வேலைக்கு விண்ணப்பிக்கும்போது அளிக்கப்படும் தன் விவரக் குறிப்பில் தக்க மாற்றங்களைச் செய்து கொள்வது அவசியம். தன்விவரக் குறிப்பில் வழக்கமாக குறிப்பிடும் வாசகங்களை அப்படியே நகலெடுத்துப் பொறிக்காமல், உங்களது திறமைகளை வெளிப் படுத்தும் பல குறிப்புகளைத் தெரிவிக்க வேண்டும். தன்விவரக் குறிப்புகளை பழைய வாசகங்கள் இடம்பெற்றிருந்தால், அவற்றால் ஒரு நன்மையும் விளையாது. மாறாக, அவை குப்பைக் கூடைக்குச் சென்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. நேர்த்தியான அல்லது காலத்திற்கு ஏற்ற தன்விவரக் குறிப்புகளை எழுதுவதற்கு 'டாப்சிவி', 'டோட்டல்ஜாப்ஸ்' போன்ற பல இணையதளங்கள் உதவி செய்கின்றன.

**தயக்கம் வேண்டாம் :** தன்விவரக் குறிப்புகளை எழுதும்போது, கடந்த ஓராண்டாக வேலை இல்லை என்பதை குறிப்பிட தயக்கம் வேண்டாம். கொரோனா பெருந்தொற்றால் ஏற்பட்ட நிலைமையை அனைவரும் அறிவார்கள் என்பதால், அதைப் பற்றி கவலைப் படாமல் தன் விவரக் குறிப்புகளை எழுதுங்கள். மேலும் கடந்த ஓராண்டு காலத்தில் புதிதாக பயின்ற பயிற்சிகள் அல்லது பகுதி நேரமாக பணியாற்றிய வேலைகள் அல்லது படித்த வணிக புத்தகங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**தலைமைத்துவத்தை வெளிப்படுத்துங்கள் :** வேலைக்கு ஆள் எடுக்கும் பல விளம்பரங்களில் தலைமைத்துவம் இருப்பவர்களைத் தேடுவதாக குறிப்பிடுகிறது. பயிற்சி அளித்தல், இணங்கிப் பழகுதல், முடிவெடுத்தல் போன்ற தலைமைத் துவத்தை விரும்புகிறார்கள். வேலை தேடி வந்திருக்கும் பெரும் கூட்டத்தில் உங்களைத் தனித்துவப்படுத்தி வெளிப்படுத்திக் கொள்ள தலைமைத்துவம் பேருதவியாக இருக்கும். நிறுவனத்தின் அதிகாரியாக இருந்துதான் தலைமைத்துவத்தை வெளிப்படுத்தி இருக்க வேண்டுமென்பதல்ல. தினசரி வாழ்க்கையில் அனைவரும் தலைமைத்துவத்துவப் பண்புகளைப் பயன்படுத்தி இருப்போம். அவற்றை உங்களுடைய தன்விவரக் குறிப்பில் குறிப்பிடுங்கள். இது உங்களின் மதிப்பை பன்மடங்கு உயர்த்தும்.

**பயிற்றுவித்துக் கொள்ளுங்கள் :** புதிய வேலைக்கு உங்களை தகவமைத்துக் கொள்வதற்கு முறையான பயிற்சி அவசியமாகும். அதற்காக உங்களை பயிற்றுவித்துக் கொள்ளுங்கள். தொழில்முறை வேலை பயிற்றுநர்கள் பலர் இருக்கிறார்கள் என்றாலும், இந்த சேவைகளை இலவசமாக அளிக்கும் நிறுவனங்களும் உள்ளன. இதுபோன்ற நிறுவனங்கள் தன்விவரக் குறிப்புகளை ஆராய்ந்து தக்க மாற்றங்களைத் தெரிவிக்கும். அதே போல, தலைமைத்துவம் போன்ற பண்பியல்புகளை மேம்படுத்திக் கொள்ள ஆலோசனைகளை வழங்கும். கடந்த ஓராண்டாக வேலையில் இல்லாததால் புதிய வேலைக்குச் செல்லும்போது கொஞ்சம் மனத் தயக்கம் இருக்கும். அவற்றில் இருந்து விடுபட பயிற்றுநர்களின் ஆலோசனைகளைப் பெறுவது நல்லது.

நன்றி: **தினதந்தி**

**ஆ**ன்லைனில் பொருள்களை வாங்குவது இப்போது அதிகரித்து உள்ளது. அதிலும் கொரோனா தொற்றின் காரணமாக ஊரடங்கு. பொது முடக்கம் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து வீட்டில் இருந்தே எல்லாப் பொருள்களையும் வாங்கும் வழக்கம் வந்து விட்டது. அமேஸான் போன்ற உலக அளவில் ஆன்லைன் பொருள் வணிகத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் மிக அழுத்தமாக, ஆழமாக, பரவலாக தம் வேர்களை நம் நாட்டின் மூலைமுடுக்குகளில் எல்லாம் ஊன்றிவிட்டன.

'மிகப் பெரிய கார்ப்பரேட் நிறுவனங்கள் தாம் ஆன்லைன் வணிகம் செய்ய முடியுமா? நாம் செய்ய முடியாதா?' என்ற கேள்வி திருநெல்வேலி மாவட்டம் கல்லிடைக்குறிச்சியைச் சேர்ந்த பழனிராஜன் என்ற இளைஞருக்குள் எழுந்திருக்கிறது. அதன் விளைவாக தோன்றியதுதான் அவருடைய ரூரல் பாஸ்கெட், ரூரல் ஷாப்.காம் ஆகிய ஆன்லைன் நிறுவனங்கள்.




என்றாலும், இந்த ஆன்லைன் வணிக நிறுவனங்களைத் தொடங்கி நடத்த அவர், ஏற்கெனவே தன்னை அதற்குத் தகுதிப்படுத்திக் கொண்டிருக்கிறார் என்பது அவரிடம் பேசிய போது தெரிந்தது.

ஆன்லைன் வணிக நிறுவங்களைத் தொடங்கி நடத்த விரும்பும் இளைஞர்கள் அவருடைய அனுபவங்களில் இருந்து கற்றுக் கொள்ள வேண்டியவை நிறைய இருப்பதால், அது தொடர்பாக பழனிராஜனிடம் கேட்டோம்.

''வசதி அதிகம் இல்லாத குடும்பத்தைச் சேர்ந்தவன் நான். கோவில்பட்டியில் உள்ள கல்லூரியில் 2012–இல் பி.இ. (EEE) படித்து முடித்து விட்டு வேலையில்லாமல் இருந்தேன். பெங்களூருவில் உள்ள ஒரு நிறுவனத்தில் சேல்ஸ் அண்ட் மார்க்கெட்டிங் பிரிவில் வேலை வேலை கிடைத்தது. அந்நிறுவனத்தில் வேலை செய்தபோது, நிறைய வாடிக்கையாளர்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. புதிய மனிதர்களின் தொடர்புகள் நிறையக் கிடைத்தன.

எனது சொந்த ஊர் திருநெல்வேலி என்றதும், நான் பெங்களூருவிலிருந்து ஊருக்குப் போகும் போதெல்லாம் 'திருநெல்வேலி அல்வா' வாங்கித் தரச் சொல்லி வாடிக்கையாளர்கள் கேட்பார்கள். அவர்களுக்கு மட்டுமல்ல, அவர்களுடைய நண்பர்களுக்கு, அவர்கள் வேலை செய்யும் நிறுவன மேலதிகாரிகளுக்கு என நிறைய அல்வாவை திருநெல்வேலியில் இருந்து சுமந்து வந்து நான் அவர்களிடம் கொடுக்க வேண்டியிருந்தது.

அல்வா தவிர, மசாலாப் பொருள்கள், பிற தின்பண்டங்கள், ஸ்நாக்ஸ் என்று வாங்கித்தந்து கொண்டிருந்தேன். தின்பண்டங்கள், ஸ்நாக்ஸ் ஆகியவற்றை வாங்கித் தரும்போதுதான் அவற்றைத் தயாரிக்கும் மகளிர் சுய உதவிக் குழுக்களில் உள்ள பெண்கள் தின்பண்டங்களைத் தயாரித்து விட்டு, அவற்றை விற்பனை செய்ய முடியாமல் தவித்துக் கொண்டிருந்தார்கள். நான் அவர்களுக்கு உதவும் விதமாக அவர்கள் தயாரிக்கும் பொருள்களை வாங்கி நிறையப் பேருக்கு விற்பனை செய்து வந்தேன்.

ஒருபுறம் வேலையைப் பார்த்துக் கொண்டு, கூடுதலாக இந்தப் பொருள்களை வாங்கி தரும் வேலையையும் 'பகுதி நேர' வேலையாக இதைச் செய்து வந்தேன்.

அப்போதுதான் ஃபிலிப்கார்ட் போன்ற நிறுவனங்கள் ஆன்லைன் மூலம் பொருள்களை விற்பனை செய்யும் முறையில் வேகமாகத் தடம் பதிக்கத் தொடங்கியிருந்தன. அதைப் பார்த்த எனக்கு நாமும் ஏன் அதைப் போல ஆன்லைன் மூலம் விற்பனை செய்யக் கூடாது என்று தோன்றியது.

2016–ஆம் ஆண்டு 'ரங்கோலி டாட்காம்' என்ற ஓர் இணையதளத்தை இதற்காகத் தொடங்கினேன்.

பகுதி நேர வேலையாகச் செய்து கொண்டிருந்தது சூடு பிடிக்கத் தொடங்கியதும், பெங்களூருவில் பார்த்துக் கொண்டிருந்த வேலையை 2017–இல் விட்டுவிட்டேன். திருநெல்வேலிக்கு வந்து முழு நேர மாக ஆன்லைன் வணிகத்தில் இறங்கினேன்.

நிறைய ஆர்டர்கள் வந்து குவிந்தன. பெங்களூருவில் இருந்து மட்டுமல்ல, பல வெளியூர்களில் இருந்தும் ஆர்டர்கள் வந்தன. இதனால் 9 கூரியர் நிறுவனங் களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டேன். வாடிக்கை யாளர்கள் கேட்கும் பொருள்களை கூரியர் மூலமாக அனுப்பி வைத்தேன்.

வெறும் அல்வா, தின்பண்டங்கள், மசாலாப் பொருள்கள் என்ற எல்லைக்குள் சுழன்று கொண்டி ருந்த என் வணிகத்தை விரிவுபடுத்தினேன். மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருள்களைத் தவிர, விவசாயிகளிடம் இருந்து அவர்கள் விளை விக்கும் பொருள்களை வாங்கி, தூய்மையாக்கி, நல்ல முறையில் பேக் செய்து விற்பனை செய்யத் தொடங்கினேன். காய்கள், பழங்கள் போன்ற அழுகும் பொருள்களைத் தவிர, பிற பொருள்களை விற்கத் தொடங்கினேன்.

'ரூரல் ஷாப்டாட்காம்' மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரித்த பொருள்களை விற்பனை செய்கிறேன். 'ரூரல் பாஸ்கெட்' மூலமாக விவசாயி களிடம் இருந்து பொருள்களை வாங்கி விற்கிறேன்.

மளிகைப் பொருள்கள், பாரம்பரிய அரிசி வகைகள், நவதானியங்கள், பருப்பு என ரசாயன உரம், பூச்சிக்கொல்லி பயன்படுத்தப்படாத இயற்கை முறையில் விளைவித்த பொருள்களை ஆன்லைன் மூலம் விற்பனை செய்கிறேன். செக்கு எண்ணெய் களையும் விற்பனை செய்கிறேன்.

ஒவ்வோர் ஊரிலும் ஏதாவது சிறப்பான, தரமான பொருள்களைத் தயாரிப்பார்கள். உதாரணமாக பத்த மடையில் செய்யப்படும் பாய்களைச் சொல்லலாம்.

பத்தமடை பாய் வேண்டும் என்று யாராவது ஆன் லைனில் ஆர்டர் செய்தால், அவர்கள் வீட்டில் பத்தமடை பாய் போய்ச் சேர்ந்துவிடும். கன்னியாகுமரி, தூத்துக்குடி பகுதிகளில் பெயர் பெற்ற வண்ணம் தீட்டப்பட்ட சிப்பிகளை வாங்கி விற்பனை செய்கிறோம்.

கொரோனா பாதிப்பு ஏற்பட்டதில் ஆன்லைன் வணிகம் அதிகமானது உண்மை. அதேசமயம் ஆன் லைன் மூலம் பொருள்களை வாங்க அச்சப்பட்ட மக்களும் அதிகம். 'யார் யார் தொட்டு இந்தப் பொருள் நம் வீட்டுக்கு வந்திருக்கிறதோ' என்ற பயந்தவர்களும் அதிகம்.

அப்போதுதான் சிறிய அளவில் கடைகளைத் திறக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றியது. திருநெல்வேலி, சென்னை, தர்மபுரி ஆகிய நகரங்களில் சிறிய கடை களைத் திறந்தேன். ஆன் லைன் மூலமாக ஆர்டர் செய்து கூரியர் மூலமாகப் பொருள்களைப் பெறத் தயங்கி யவர்கள் இந்தக் கடைகளில் வந்து நேரடியாகப் பொருள் களை வாங்கிக் கொண்டார்கள்.

நான் விற்பதைப் போன்ற ஆர்கானிக் பொருள்களை விற்கும் கடைகள் எல்லா ஊர்களிலும் உள்ளன. அந்த கடைக்காரர்களிடமும் தொடர்பு கொண்டு அவர் களுடைய பொருள்களை எங்களுடைய ஆன்லைன் தளத்தின் மூலமாக விற்பனை செய்யவும் ஏற்பாடு செய்தி ருக்கிறேன்.

என்னுடைய இந்த ஆன்லைன் வணிகத்தன் மூலமாக விவசாயிகள், மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் பயன் அடைந்திருக்கிறார்கள். விவசாயி களின் விளை பொருட்கள், பெரிய மண்டிகள், புரோக்கர்கள், மொத்த வியாபாரிகள், சிறுவணிகர்கள் மூலமாக என பல கைகள் மாறி மக்களைச் சென்றடையும்போது, பலரும் அவர்களுக்குத் தேவையான லாபத்தை எடுத்துக் கொள்கிறார்கள்.

இதனால் மக்களுக்கு பொருள்களின் விலை அதிகமாகி விடும். விவசாயிகளின் விளை பொருள் களுக்கான விலையோ மிகவும் குறைவாக இருக்கும். இந்நிலையை மாற்ற விவசாயிகளிடம் நேரடியாக வாங்கி மக்களுக்கு விற்கும் எங்கள் ஆன்லைன் வணிகம் உதவியிருக்கிறது.

இத்துறையில் இறங்கி செயல்பட நினைக்கும் இளைஞர்கள் முதலில் சேல்ஸ் அண்ட் மார்க்கெட்டிங் துறை சார்ந்த நிறுவனங்களில் சில ஆண்டுகளாவது வேலை செய்து தொழில்நுணுக்கங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

அடுத்து எந்த பொருள்களை ஆன்லைன் வணிகம் செய்ய நினைக்கிறார்களோ, அந்தப் பொருள்களைப் பற்றி நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும். அந்தப் பொருள்களைத் தயாரிப்பவர்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக வாடிக்கையாளர்களுக்கு எது தேவை என்பதை நன்கு ஆராய்ந்து அவற்றை தரமா கவும், விலை மலிவாகவும் கொடுக்க முயற்சி செய்ய வேண்டும்.

எப்போதும் எதையும் கற்றுக் கொள்வதில் ஆர்வ முடையவராக இருக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட நோக்கத்தை இலக்காகக் கொண்டு எப்போதும் செயல்பட வேண்டும்" என்றார்.

நன்றி: **தினமணி**




# வாழுங்கள் நிகழ்காலத்தில்

வாழ்வதே மிகக் கடினமாக இருக்கும் இச்சூழ் நிலையில், எந்தவிதக் கவலையுமின்றி மகிழ்ச்சியாக வாழ வேண்டுமென்ற ஆசை எல்லாருக்கும் இருக்கிறது. ஆனால், எல்லாராலும் அனைத்து நிலைகளிலும், எப்போதும் அந்த மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ முடிவதில்லை. குறை சொல்வது மனித இயல்பு என்ற அடிப்படையில் வாழ்க்கையில் இருக்கும் குறைகளை மட்டும் பார்ப்பவர்களுக்கு மகிழ்ச்சியான வாழ்க்கை ஒருபோதும் கிடைக்காது. ஆனால், ஒரு சிலர் கிடைப்பதை ஏற்றுக் கொண்டு நிகழ்காலத்தை மகிழ்ச்சியாகக் கழிக்கிறார்கள். கடந்த காலத்தைப் பற்றியோ அல்லது எதிர்காலத்தைப் பற்றியோ நினைத்து அவர்கள் கவலைப்படுவதில்லை.

எனவே, நாம் எப்படி இருக்கிறோம் என்பதைப் பொருத்துதான் மகிழ்ச்சியும் நம்முடன் பயணிக்கிறது. மன அழுத்தம், கவனச் சிதறல் உள்ளிட்ட பிரச்சனைகளைக் கடந்து, கடந்த காலம், எதிர்காலம் பற்றி யோசிக்காமல் நிகழ்காலத்தை மட்டும் அனுபவித்தலே மகிழ்ச்சிக்கான வழி. கடந்த காலத்தையோ எதிர் காலத்தையோ பற்றி யோசிக்கும் போது உங்களுடைய நிகழ்காலத்தை நீங்கள் வீணடிக்கிறீர்கள். இந்த நொடியில் வாழ்க்கையில் முழுவதுமாக கவனம் செலுத்தி மகிழ்ச்சியை அனுபவிக்கும்போது உங்களுடைய உடல், மன நலப் பிரச்னைகளும் தானாகக் குறையும்.

வாழ்வதற்காகவே பிறந்திருக்கிறோம். எனவே, நீங்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதைக் கற்றுக் கொள்வது, இந்த நொடியில் சிறப்பாக வாழ உதவும். நிகழ்காலத்தில் வாழ்வது என்பது மிகவும் சுவாரசியமானது. இந்த நிமிடத்தை முழுவதுமாக அனுபவிக்கிறீர்கள் என்று அர்த்தம். இந்தத் தருணத்தில் வாழ்வது, உங்களை தெளிவாக சிந்திக்க வைப்பதுடன் வாழ்க்கையை முழுவதுமாக புரிந்து கொள்ள கற்றுக் கொடுக்கும். அதுமட்டுமின்றி உங்களுடைய ஒட்டுமொத்த செயல்களையும் மாற்றிவிடும் சக்தி கிடைக்கும், உங்களைச் சுற்றி நேர்மறை சிந்தனைகள் மட்டும் இருக்கும். வாழ்க்கையில் மிக முக்கியமான விஷயங்களில் உங்களால் கவனம் செலுத்த முடியும். இலக்குகளை நோக்கி சிறப்பாகப் பயணிக்கவும் உங்கள் வாழ்க்கை மட்டுமின்றி மற்றவர்களின் வாழ்க்கையில் உள்ள பிரச்சனைகளையும் தீர்க்க முடியும்.

**ஒரு விஷயத்தில் மட்டும் கவனம் செலுத்துங்கள்!**

உங்கள் மனம் தடுமாறும்போது அல்லது திசை திரும்பும்போது வாழ்க்கையைப் பற்றிய புரிதல் கடினமாகி விடும். மனதை முதலில் ஆரோக்கியமாகவும் அதற்கு அடுத்தபடியாக மகிழ்ச்சியுடனும் வைத்திருக்க வேண்டும். அதற்கு ஒரு விஷயத்தில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும். அதாவது நிகழ்காலத்தை முழுமையாக அனுபவிக்க வேண்டும்.

**சுய பாராட்டு அவசியம்**

உங்களில் எத்தனை பேர் உங்களுக்கு நீங்களே நன்றியோ பாராட்டோ கூறியிருக்கிறீர்கள்? யாருமில்லை என்பதுதான் பதிலாக இருக்க முடியும். ஆனால், மற்றவர்களிடம் இருந்து பாராட்டுகளை எதிர்ப்பார்ப்பதும் அது மறுக்கப்படும்போது மனம் சோர்வடைவதும் நடந்து கொண்டிருக்கிறது. உங்களுக்கு நீங்களே நன்றி தெரிவிக்காவிடில், உங்களை நீங்களே பாராட்டாவிடில் மற்றவர்களிடம் பாராட்டுகளை எதிர்பார்ப்பதில் என்ன நியாயம் இருக்கிறது?

இதற்காக நீங்கள் செய்ய வேண்டியது கடந்த ஒரு மாதத்தில் நீங்கள் என்ன சாதனை எல்லாம் செய்தீர்கள்? மனதுக்கு மகிழ்வான நிகழ்ச்சிகள் எவை? உங்கள் மனதை சந்தோஷப்படுத்த என்னவெல்லாம் செய்தீர்கள் என்று எழுதி வைத்து, அதனை ஒருமுறை பார்த்து உங்களுக்கு நீங்களே நன்றி கூறிக் கொள்ளுங்கள். இந்த நன்றியுணர்வு மனப்பான்மை உங்களை நிகழ்காலத்தை அனுபவிக்க ஊக்கப்படுத்தும்.

நன்றி: தினமணி-இளைஞர்மணி

**தருணத்தை உருவாக்குங்கள்!**

உண்மையில் உங்களுக்கான வாய்ப்பு எதிர் காலத்தில் இல்லை. நிகழ்காலத்தில்தான் இருக்கிறது. ஆம், எதிர்கால சிறந்த வாழ்வுக்கு நிகழ்கால உழைப்பும் மகிழ்ச்சியும் தேவைதானே? மகிழ்வான தருணங்கள் தானாக ஒன்றும் நிகழ்ந்து விடுவதில்லை. மாறாக, அவை உங்களாலோ வேறு யாராலோ உருவாக்கப்படுபவையே. எனவே, இந்த நொடியில் மகிழ்ச்சியான தருணங்களை உருவாக்குங்கள். உங்களுக்கு எது மிகவும் தேவை என்பதைத் தெளிவுபடுத்தி, அவற்றைச் செயல் படுத்துவதற்கு அதிக நேரத்தைச் செலவிடுங்கள்.

**வேண்டுமென்றே செய்யுங்கள்!**

உங்களுடைய மகிழ்ச்சிக்காக சிலவற்றை தற்செயலாக அன்றி திட்டமிட்டு வேண்டு மென்றே செய்வது அவசியம். வாழ்வதற்கான உங்களின் திறனை மேம்படுத்த விரும்பினால் மகிழ்ச்சியாக சில விஷயங்களைத் திட்டமிட்டு அதில் ஈடுபடலாம்.

உதாரணமாக, மனதளவில் நீங்கள் துன்பமாக, சோர்வாக உணர்ந்தால் ஒரு சிறிய சுற்றுலாவுக்குச் செல்லலாம். அவ்வாறு செல்லும் போது நிகழ்காலத்தை உணர்வுப் பூர்வமாக அனுப விக்கும் போது ஏற்படும் மாற்றத்தை உணர முடியும்.

**கவனமாகக் கேளுங்கள்!**

எந்தவித கவனச்சிதறலுமின்றி பிறர் கூறுவதை உன்னிப்பாகக் கேட்பது கூட ஒரு கலைதான். நேரத்தை சரியாகப் பயன்படுத்தி வாழக் கற்றுக் கொள்பவர்கள் இந்தக் கலையை அறிவார்கள்.

உங்களைச் சுற்றியுள்ளவர்களின் நிலையை அறிந்து கொள்வது வாழ்க்கைக்கு அவசியமான ஒன்று. அந்தவகையில், நிகழ்காலத்தை அனுபவிக்கத் தொடங்கிவிட்டால் மற்றவர்கள் சொல்வதை உங்களால் உன்னிப்பாகக் கேட்க முடியும். ஏன், அவர்களின் பிரச்னைக்கு உங்களால் தீர்வு காண முடியும். இதன் மூலமாக சமூகத்தில் உங்களுக்கு கிடைக்கும் நிறைய உறவுகளினால் வாழ்க்கை அழகாகும்.

**நிகழ்காலத்தில் இருங்கள்!**

நீங்கள் விரும்பும் எதிர்காலத்தை உருவாக்க வேண்டுமெனில் நிகழ்காலத்தில் மகிழ்ச்சியுடன் வாழ கற்றுக் கொள்ள வேண்டும்.

மற்றவர்கள் மீதுள்ள அன்பை வெளிப்படுத்துங்கள், காதலைப் பரிமாறிக் கொள்ளுங்கள், இயலாதோருக்கு உதவுங்கள், நெருங்கியவர்களிடம் மனம் விட்டுப் பேசுங்கள், இவ்வாறு உங்களுடைய மன நிம்மதிக்கும் மகிழ்ச்சிக்கும் எது தேவையோ அதனை உடனே செய்து விடுங்கள்.

இந்த தருணத்தை நீங்கள் அனுபவிக்கும்போது கடந்த காலம் மறைவதுடன் எதிர்கால சிந்தனைகள் மேலோங்கும். உண்மையில், கடந்த காலத்தைப் பற்றி யோசிக்காமல் நிகழ்காலத்தை அனுபவிப்பது உங்கள் எதிர்காலத்தை சிறப்பாக உருவாக்க உதவும்.

# முக்கிய அறிவிப்பு

தமிழக மின்சரவரியம் 30.12.2021 முதல் சூரிய ஒளி மூலம் மின்சார உற்பத்தி செய்யும் நிலையங் களுக்கு தமிழ் நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் வழங்கிய "Tariff Order No.8/2021"–க்கு working instructions வழங்கியுள்ளது.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் வழங்கிய "Tariff Order No.8/2021"- ல் மூன்று வகையான சூரிய ஒளி மின்சார உற்பத்தி செய்யும் நிலையங் களுக்கான விதிகளையும் கட்டணங்களையும் நிர்ணயம் செய்துள்ளது.

அது சமயம் நமது EEDISSIA உறுப்பினர்கள் தங்களது மின்சார பயன்பாடு ரூபாய் 2 ஆயிரத்துக்கு மேல் எங்கெல்லாம் மின்சாரத்திற்காக கட்ட ணங்களை செலுத்துகிறார்களோ அங்கு சூரிய ஒளி மின்சார தகடுகளை பொருத்தி தங்களது செல வினத்தை பயனுள்ள முதலீடாக மாற்ற இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**-செந்தில் சோலார்**
**Cell : 96550 79555**
EEDISSIA உறுப்பினர்.



# மனித வள மேலாண்மை

எல்லாவிதமான வளங்களைக் காட்டிலும் மிகச் சிறந்தது மனிதவளம். அத்தகைய மனிதவளம் இந்தியாவில் பெருமளவு உள்ளது. மனித வளம் அதிக அளவில் இருந்தாலும் கூட, ஒரு நிறுவனம் எதிர்பார்க்கும் திறன்களைக் கொண்டவர்கள் எண்ணிக்கை மிகக் குறைவான அளவிலேயே உள்ளது. அப்படி திறன் மிக்கவர்களை தேடி கண்டறியும் மேலாண்மைத் திறனுயை நபர்கள் மனிதவளத்துறை மேலாளராக நியமிக்கப்பட்டு வருகிறார்கள். இன்றைய கார்ப்பரேட் உலகில் மனிதவளத்துறை மேலாளர்களின் தேவை அதிகரித்த வண்ணம் இருக்கிறது. மனிதவளத்துறை மேலாளராகப் பணிபுரிய விரும்புபவர்கள் பல்வேறு திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

**தகவல் தொடர்பு :**

ஒரு மனிதவளத்துறை மேலாளர் என்பவர் தகவல் தொடர்பில் மிகச் சிறந்து விளங்க வேண்டும். அதாவது பேச்சு மூலமாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ ஒரு கருத்தைத் தெளிவாக சொல்லும் திறன் உடையவராக இருத்தல் அவசியம். மனித வள மேலாண்மைப் பிரிவுதான் ஒரு நிறுவனத்திற்குத் தேவையான பணியாளர்களை தேர்வு செய்ய வேண்டிய பொறுப்பில் இருக்கிறது. மனிதவளப் பிரிவு மேலாளர் தொடர்ந்து பல்வேறு நேர்காணல்களை நடத்த வேண்டி இருக்கும். நிறைய பேசும் தேவை இருக்கும்.

ஒரு நிறுவனத்தில் வேலை செய்யும் பணியாளர்களுடன் வேலை சம்பந்தமான விஷயங்களை தொடர்ந்து பேசுவதுடன், பணிக்குத் தொடர்பில்லாத விஷயங்களையும் கேட்டுத் தெரிந்து கொள்வதில் திறன் உடையவராக மனிதவளத்துறை மேலாளர் இருக்க வேண்டும். பணியாளர் ஒருவரின் குடும்பம், அவரின் பொருளாதாரச் சூழல், அவருடைய கஷ்ட நஷ்டங்கள் போன்வற்றைப் பற்றியும் தெரிந்து கொள்வதில் ஆர்வம் காட்ட வேண்டும். அப்படி செய்யும்போது அந்த பணியாளருக்கு மனிதவளத் துறை மேலாளர் மீது ஒரு நம்பிக்கையையும் பிணைப்பையும் அது ஏற்படுத்தும். இது நிறுவ னத்தின் வளர்ச்சிக்கு உதவி புரியும்.

**பல்வேறு பணிகள் :**

மனிதவளத்துறை மேலாளர் ஒரே சமயத்தில் பல பணிகளைச் செய்யக் கூடிய திறன் பெற்றவராக இருக்க வேண்டும். ஒரு நிறுவனத்தில் மனிதவள

மேலாண்மைப் பிரிவின் பணி, நிறுவனத்திற்குத் தேவையான பணியாளர்களைத் தேர்ந்தெடுப்பது, அவர்களுக்கு பணி குறித்த பயிற்சி வழங்குவது, பணியாளர்களின் செயல்திறனை மதிப்பீடு செய்வது, பணியாளர் உறவுகளை மேம்படுத்துவது என பல்வேறு செயல்பாடுகளை உள்ளடக்கியதாக உள்ளது. இவை அனைத்தையும் ஒருங்கிணைத்து செல்வதற்கான தகுதி உடையவராக மனிதவளத்துறை மேலாளர் இருப்பது அவசியம்.

பணியாளர் தொடர்பான விவரங்கள் மற்றும் சட்டரீதியான ஆவணங்களையும் பராமரிக்க வேண்டிய பொறுப்பும் அவருக்கு உண்டு.

**முடிவெடுக்கும் திறன் :**

முடிவெடுக்கும் திறன் மனிதவளத்துறை மேலாளருக்கு மிக அவசியம் இருக்க வேண்டிய திறனாகும். நிறுவனத்தில் பணியாளர் – நிர்வாகம் தொடர்பான பல சிக்கல்கள் ஏற்படும்போது, நிறுவனத்துக்குப் பாதிப்பு இல்லாத வகையில் முடிவெடுத்து செயல்படவேண்டிய தேவை மனிதவளத்துறை மேலாளருக்கு இருக்கிறது. அதேசமயம் பணியாளர்களின் மனக்கசப்புக்கும் இலக்காகி விடக் கூடாது. ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில், குறிப்பிட்ட தருணத்தில் சரியான முடிவெடுக்காவிட்டால், அதனால் ஏற்படும் பிரச்சனைகளைச் சமாளிக்க முடியாமல் போய் விடும் ஆபத்து இருப்பதால், முடிவெடுக்கும் திறன் மனிதவளத்துறை மேலாளருக்கு மிக மிக அவசியம்.

**பட்ஜெட் :**

இவை எல்லாவற்றையும்விட ஒரு நிறுவனத்தின் பட்ஜெட் இத்துறையின் கையில்தான் உள்ளது. நிர்வாகம் தொடர்பான செலவினங்களைக் கட்டுப்படுத்துவது மற்றும் தேவையற்ற செயல்களுக்கு செலவு செய்யாமல் இருப்பது போன்றவற்றை கண்காணிக்கும் பொறுப்பும் அவர்களுடையதுதான். பணியாளர்களுக்கு வேண்டிய இழப்பீடுகள் மற்றும் பணியாளர்களின் நலன்கள் தொடர்பான பணப்பட்டுவாடாக்கள் போன்ற அனைத்தும் மனிதவளத்துறை மூலமாகவே செயல்படுத்தப்படும் என்ற நிலை உள்ளதால் மனிதவளத்துறை மேலாளருக்கு கூடுதல் பொறுப்பு உள்ளது.

பணியாளர்களின் சம்பளம் முதல் பணியிடத்தில் ஏற்படும் பிரச்சனைகள வரை அனைத்தையும் தெரிந்து கொண்டு அவற்றைக் கையாள வேண்டிய மிகப்பெரிய திறன் மனிதவளத்துறை மேலாளருக்கு அவசியம். பணியாளர் கூறும் பிரச்சனையை உணர்ந்து கொண்டு அதற்குத் தீர்வு காண்பதற்கு முன் தொடர்புடைய பணியாளரின் முழு விவரங்களையும் தெரிந்து கொண்டு அதற்கேற்ப தீர்வு சொல்ல வேண்டியது அவசியம். அவர் சொல்லும் தீர்வு, பிற பணியாளர்களின் நலனையும் பாதிக்கக் கூடாது. நிறுவனத்தின் நலனையும் பாதிக்கக் கூடாது.

மனிதவள மேலாண்மைப் பணி என்பது எல்லாவிதமான பணிகளையும் செய்யக் கூடிய அனைத்து நிறுவனங்களிலும் தேவைப்படும் ஒரு பணியாகும். அரசு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் என்ற பாகுபாடின்றி எல்லா நிறுவனங்களிலும் மனிதவளத்துறையினருக்கு வேலை வாய்ப்புகள் உள்ளன. எனவே மனிதவளத்துறையில் பணியாற்றக் கூடிய கல்வியைக் கற்பதோடு அதற்கான திறன்களை இளைஞர்களாகிய நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டியது மிக மிக அவசியமாகும்.

நன்றி: *தினமணி*

**காகித சேமிப்பு மற்றும் கால விரயத்தை தவிர்க்கும் பொருட்டு, ஈடிசியா உறுப்பினர்களுக்கான செய்திகள், கூட்டங்கள் பற்றிய தகவல்கள் உறுப்பினர்கள் அனைவருக்கும் ஈ-மெயில், வாட்ஸ்அப் மற்றும் எஸ்.எம்.எஸ், மூலம் அனுப்பப்பட்டு வருகின்றன. தகவல்கள் கிடைக்கப் பெறாதவர்கள் தங்களது ஈ-மெயில், மொபைல் எண் விபரங்களை ஈடிசியா அலுவலகத்தில் தெரிவித்து, சரிபார்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

Printed & Published by : S.K. Rajeswaran, Erode, Past President, on behalf of Erode District Small Industries Association (EEDISSIA), Printed at Sakura Computer Prints and Offset Printers, No.7, Muthuvelappa Street, Erode - 638 001. and Published at Erode District Small Industries Association (EEDISSIA) No.5/1, SIDCO Industrial Estate, Chennimalai Road, Erode-638 001. Tamil Nadu
Editor : S. Ramamoorthy